விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 06 வியாழக்கிழமை (22.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 246

போர்க்குற்ற விவகாரம்

## இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு
# பயிற்சி வழங்க அமெரிக்கா மறுப்பு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் எனக் காரணம் காட்டி இலங்கை இராணுவத்தின் இரண்டு சிரேஷ்ட மேஜர் ஜெனரல்களுக்கு பயிற்சிகளை வழங்க அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## பசில்-ஜோன் சந்திப்பு



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரொக்கின் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம பெற்றுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ஜனாதிபதியுடன் ரணில் சந்திப்பு

இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை நேற்றுமுன்தினம் புதுடில்லியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது இரு நாட்டு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பிராந்திய உறவுகள்மற்றும்பொருளாதாரம் (20ஆம் பக்கம் பார்க்க)

## எந்த தீவிரவாதமும் வடக்கில் இல்லை!
### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் விடுதலைப்புலிகள் மற்றும் பாகிஸ்தானின் முஸ்லிம் தீவிரவாத அமைப்புகள் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு தயாராகி வருவதாக பரவி வரும் செய்திகளில் எந்த உண்மையுமில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எந்த தீவிரவாத அமைப்பும் வடக்கில் மீண்டும் செயற்படுவதற்கு இராணுவம் இடமளிக்காது. நாட்டில் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் ஐந்து இடங்களில் முறைப்பாடு கையேற்கப்படும்
### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 5 இடங்களில் தேர்தல் திணைக்களத்தின் முறைப்பாட்டு கையேற்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில்நேற்று பிற்பகல்ஒரு மணியளவில ஊடகவியலாளர்களினைச் சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பூரணமான முறையில் பதிலளிக்காத ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இன்று (நேற்று) அரச திணைக்கள அதிகாரிகளினையும் வேட்பாளர்களினையும் சந்தித்து வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியிருந்தேன்.

இக் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த பெலாரஸ் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நான்கு நாள் பயணமாக பெலாரஸ் நாட்டுக்கு செல்ல உள்ளதாக ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

இந்த வாரம் ஜனாதிபதி அங்கு செல்ல உள்ளதாகவும் அந்த நாட்டு ஜனாதிபதி உள்ளிட்ட உயர் மட்ட தரப்பினரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் (20ஆம் பக்கம் பார்க்க)

## கருணை மனு நிராகரிப்பு;
## பேரறிவாளன் மீண்டும் கேள்வி

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு தற்போது வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பேரறிவாளன நேற்று வீடியோ கான்ஃப்ரென்சிங் மூலம் மாநிலத் தகவல் ஆணையத்திடம் தனது கருணை மனு குறித்து பல்வேறு விவரங்களைக் கோரினார்.

மேலும் லீனா மேரி ஜார்ஜ் என்ற ஆராய்ச்சியாளருக்கு தன்னை சிறையில் பேட்டி எடுக்க அனுமதி மறுக்கப்பட்டது ஏன்எனவும்அவர தெரிந்து கொள்ள விரும்பியதாக பேரறிவாளனுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை வேலூர் சிறைக் கண்காணிப்பாளர் அறையிலிருந்து காணொளி இணைப்பின் மூலம் மாநிலத் தகவல் ஆணையருடன் தொடர்பு (20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்திற்குள் 10 ஆலயங்கள் முடக்கம்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியிலுள்ள 10க்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளதாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பகுதியிலுள்ள இந்து ஆலயங்களில் (20ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானுக்கு ஒரு நீதி; இலங்கைக்கு ஒரு நீதியா?
### இந்திய அரசிடம் ராமதாஸ் கேள்வி

(சென்னை)

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து பாகிஸ்தான் இடைநீக்கம் செய்ய முயற்சிகளை மேற்கொண்ட இந்தியா, இலங்கை விடயத்தில் மாறாக செயற்படுகிறது என பாட்டாளிமக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று கடந்த மார்ச் 23-ம் திகதி நான் தான் முதன்முதலில் வலியுறுத்தினேன்.

அதைத் தொடர்ந்து தற்போது தமிழகத்தின் மற்ற கட்சித் தலைவர்களும் இதே கோரிக்கையை வலியுறுத்தி உள்ளனர். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இந்த கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் 7 கோடி தமிழக மக்களின் கோரிக்கையை ஏற்பது பற்றி மத்திய அரசு (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து இரு உறுப்பினர்கள் நீக்கம்

## யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களாக இருந்த கட்சியின் அச்சுவேலி இணை இணைப்பாளரும் வலி.கிழக்கு பிர தேச சபையின் உறுப்பினருமான கிருஸ்ண பிள்ளை செல்வராசா(லிங்கேஸ்), பிரதேச சபை உறுப்பினர் ஆசைப்பிள்ளை சசீந்திரன் ஆகியோரை கட்சியில் இருந்து விலக்கியுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந் திரன் அறிவித்துள்ளார்.

தமது கட்சியில் இருந்து விலக்கப்பட்ட மேற்படி இருவருடனும் தமது கட்சி சார்ந்த தொடர்புகளை எவரும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் கேட்டுள்ளார். (ந)



வட மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பிரதிநிதிகளை தேர்தல்கள் ஆணையாளர் நேற்று யாழ் பொது நூலகத்தில் சந்தித்த பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளர் சீ.விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# வடக்கு வேட்பாளர்களுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

யாழ்.மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய விஜயம் செய்து வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களினை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இக் கலந்துரையாடல் நேற்று மு.ப 11.00 மணியளவில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வேட்பாளர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள், சவால்கள் என்பன தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் தேர்தல் விதிமுறைகள் தொடர்பில் வேட்பாளர்களிற்கு தெளிவுபடுத்தப்பட்டதாகவும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளினை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிதலைவர்கள், அமைச்சர்கள் ஆகியோர்உட்பட பலர்கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை இக்கலந்துரையாடலிற்கு முன்னதாக அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸாருடனான சந்திப்பொன்றும் மு.ப 9.00 மணியளவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (செ-4)





வட்டக்கச்சி - கிளிநொச்சி
ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்
பிரமோற்சவம் - 2013

இன்று வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் 3-ம் திருவிழா. இன்று எம் பெருமான் லக்சுமி நாராயணர் கோலம் தாங்கி அருட்காட்சி கொடுப்பார். காலை 9 மணிக்கு பகல் பூசை ஆரம்பமாகி 12 மணிக்கு நிறைவுறும். மாலைத் திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு நிறைவுறும்.

-பரிபாலன சபையினர்

(C-4407)


# ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய நபர்

யாழ்.பஸ்நிலையத்திற்கு முன்பாக நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகவியலாளர்களினை மர்ம நபரொருவர் தொடர்ந்து படம் எடுத்தமையினால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் ஊடகவியலாளர்களிற்கும் இவ் மர்ம நபருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தின் போது செய்தி சேகரிப்பதற்கு அங்கு சென்றிருந்த ஒரு சில ஊடகவியலாளர்களினை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த நபரொருவர் கமராமூலம் படமொடுத்ததோடு தனது கைத்தொலைபேசி மூலம் வீடியோவும் எடுத்துள்ளார்.

இதனை கவனித்த ஊடகவியலாளர் அவ் நபரிடம் சென்று ஏன் எம்மை படமெடுக்கின்றீர்கள் என கேட்டனர். இதனால் திக்குமுக்காடிய அவர் எனது கைத்தொலைபேசி நான் படமெடுப்பேன் என அச்சுறுத்தும் வகையில் பதிலளித்தபடி நழுவிச் சென்றார்.

புலனாய்வுத் தோரணையில் நடந்து கொண்ட அந்நபர் ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)


மனோதத்துவ வைத்தியம்
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்
23.08.2013 முதல்27.08.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்
(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
(C-4406)

பிள்ளையார் இன்
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250/=
தினமும் 12 மணிமுதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சைவ உணவு: 150/- அசைவ உணவு 180/-
தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(C-4405)

தொடர்ந்தும் மேலதிக சேவையில்...
இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.
குறிப்பு: விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
WESTERN UNION MONEY TRANSFER
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(C-4403) T.P. No.:-021 222 5392

NORTH LANKA IIT
வழங்கும் அரிய சந்தர்ப்பம்!
50% Scholarship!
SRI LANKAN UGC APPROVED CERTIFICATE!
Business University - Costa Rica
நீங்களும் கணினிப் பட்டதாரியாகுங்கள்!
* B.Sc. in Comp. Sc.
Qualification:- HND or O/L or A/L
Duration:- 1 - 3 Years
Special Batch!
* M.Sc.
Duration:- 01 Year
* MBA
கல்வியியற் கல்லூரி மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட பிரிவு!
சலுகைக் கட்டணத்தில் ....
பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற மாணவர்களுக்கு North Lanka IIT இனது வாழ்த்துக்கள்!
#113, Luxan Plaza, Navalar Road, Jaffna.
Tel: 0215677774 Mob: 0777592666
(C-4410)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகளை நாடுகடத்தினால் அவர்களின் உயிருக்கே ஆபத்து

## வைகோ தெரிவிப்பு



தமிழ்நாட்டில் இருந்து 3 தமிழ் அகதிகளை இலங்கைக்கு நாடு கடத்துமாறு இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இத்தாலி ராஜன் எனப்படும் சுந்தர்ராஜன், ஈழநேரு, செந்தூரன் ஆகியோரையே நாடு கடத்துமாறு இந்திய மத்திய அரசு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த நாடு கடத்தல் உத்தரவைத் தடுத்து நிறுத்த இந்த மூவரும் சென்னையிலுள்ள சட்டவளவாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களின் உதவியை நாடியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இம்மூன்று பேரையும் நாடு கடத்தக்கூடாதென ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இவர்களில் சுந்தர்ராஜன் சில இலங்கைத் தமிழ் அகதிகளை பயண ஆவணங்களின்றி அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று புழல் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். இவ்வழக்கு தொடர்பாக சுந்தரராஜன் மேன்முறையீடு செய்திருக்கிறார்.

ஈழநேரு தற்போது திருச்சி சிறையில் இருக்கிறார். அவர் ஒருவரை ஒரு இலட்சம் ரூபாய் அளவில் மோசடி செய்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

செங்கல்பட்டு சிறப்பு முகாமிலிருந்து பல்வேறு போராட்டங்களுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்ட செந்தூரன் தற்போது தாம்பரத்தில் வசித்து வருகிறார்.

அவர்கள் மூவரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவிருக்கின்றனர் என்று செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அவர்கள் அவ்வாறு திருப்பியனுப்பப்பட்டால் அவர்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடும் என வைகோ தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைத் தமிழர்களை அவர்களது விருப்பத்துக்கு மாறாக நாடு கடத்தக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் வைகோ கூறுகிறார்.

கடந்த 20 ஆண்டுகளில் இவ்வாறு இலங்கைத் தமிழ் அகதிகள் எவரும் கட்டாயமாக நாடு கடத்தப்பட்டதில்லை எனச்சுட்டிக்காட்டும் அவர் அம்மூவரையும் இலங்கைக்குத் திருப்பியனுப்பக்கூடாது என வலியுறுத்தி பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் உள்துறை அமைச்சர் சுசில்குமார் ஷிண்டே ஆகியோருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். (அ-2)

# தேர்தல் வன்முறை; 12 பேர் கைதாகினர்

மாகாணசபை தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 40 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் தேர்தல் பிரிவு அறிவித்துள்ளது.

இம்முறைப்பாடுகளில் 33 சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. சட்டவிரோத தேர்தல் பிரசாரம் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதேவேளை தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 149 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# பாகிஸ்தானுக்கு செல்கிறார் பீரிஸ்

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளார். அமைச்சர் இன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

பொதுநலவாய நாடுள் தலைவர்கள் அமர்வு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கிலேயே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஹீனா ரப்பானி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இருதரப்பு உறவுகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. (அ-2)

# ஞானாலய நூலக திறப்பும் கண்காட்சியும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் புதிதாக 90 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஞானாலயம் நூலகம் திறப்பு விழாவும் கண்காட்சியும் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் ஆசியுரைகளை வல்வெட்டித்துறை சிவன்கோயில் பிரதமகுரு சிவ ஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள், பருத்தித்துறை அஞ்சலியக அருட்தந்தை சூ.டேமியன் அடிகளார், பருத்தித்துறைப் பள்ளிவாசல் மௌலவி முகமட் அஜ்மல் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து வாழ்த்துரைகளை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் க.ஜெயசீலன், வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தம், வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்புரைகளை உளநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் மகிழ்வுடன் வாழ்வு எனும் பொருளிலும் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் காலமும் வாழ்வும் எனும் பொருளிலும் பேராசிரியர் நா.ஞானகுமரன் தியானமும் வாழ்வும் எனும் பொருளிலும் ஓய்வு பெற்ற நூலகர் க.சௌந்தரராஜன் நூலகமும் வாழ்வும் எனும் பொருளிலும் பா.அகிலன் கலையும் வாழ்வும் எனும் பெொருளிலும் உரைகளை ஆற்றவுள்ளனர். (அ-19)

# இலங்கையின் நற்பெயரை பாதுகாக்க வெளிவிவகார அமைச்சு தவறிவிட்டது

## சஜின்வாஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் நற்பெயரை பாதுகாக்க வெளிவிவகார அமைச்சு தவறிவிட்டதாக, ஜனாதிபதியின் ஆலோசகர் சஜின் வாஸ் குணவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆங்கிலஊடகம்ஒன்றுக்குவழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை பல்வேறு அழுத்தங்களுக்கு உட்பட்டது. இது தொடர் பில் அரசாங்கம் பல்வேறு இலக்குகளை முன்வைத்திருந்தது.

எனினும் வெளிவிவகார அமைச்சு இதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்தவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் செயற்படுகின்ற அமெரிக்க தூதுவர் தன்னிச்சையாக நடந்து கொள்வதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இலங்கையின் சொந்த உள்விவகாரங்கள் தொடர்பில் அவர் தமது அதிகாரங்களை மீறி தலையீடு செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகின்றமையை அரசாங்கத்துக்கு சிறந்த வாய்ப்பாக கருதுவதாகவும் எனினும் சிலருக்கு இது மெல்லுவதற்கு அவல் கிடைத்தாற் போல் ஆகிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சஜின் வாஸ் குணவர்த்தன இலங்கை வெளியுறவு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயற்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அவுஸ்திரேலியா பயணத்தை கைவிடுங்கள்- கிழக்கில் பிரசாரம்

(மட்டக்களப்பு)

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் ஆபத்தான பயணங்கள் குறித்து அவுஸ்திரேலியா கிழக்கு மாகாணத்தில் பிரசாரம் செய்யவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடு வீடாக சென்று துண்டுப் பிரசுரங்கள் வழங்கி பிரசாரம் செய்யப்படவுள்ளது.

அவுஸ்திரேலியாவிற்குள் படகு மூலம் பிரவேசிக்கும் எவருக்கும் புகலிடம் வழங்கப்படமாட்டாது. உடனடியாக அவர்கள் பப்புவா நியூகினித் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் எனவும் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா அண்மையில் புகலிடக் கோரிக்கையாளர் சட்டங்களில் திருத்தம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. புகலிடக் கோரிக்கையாளர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அவர்கள் பப்புவா நியூகினித் தீவுகளில் குடியேற்றப்படுவர் என தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் செலுத்தும் பணம் வீண் விரயமாகும் என அவுஸ்திரேலியா எச்சரிக்கை விடுத்துள்ளது. சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் போலிப் பிரசாரத்திற்கு எவரும் ஏமாறக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம்

## லோக்சபாவில் மீண்டும் வலியுறுத்து

(சென்னை)

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று மீண்டும் லோக்சபாவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அண்ணா திராவிட முன்னேற் றக் கழகம் மூற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் என்பன நேற்று முன்தினம் இதனை வலியுறுத்தின.

இது தொடர்பாக லோக்சபாவில் அ.தி.மு.கவின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.தம்பிதுரை உரையாற்றுகையில், இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலைகளை இந்தியா மறந்துவிடக் கூடாது என்று தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர் வதேச விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந் நிலையில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவின் நட்பு நாடாக இலங்கையை கருத முடியாது என்று திராவிட முன்னேற்றக்கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் எந்த அழுத்தங்களையும் இலங்கை பொருட்படுத்தியதில்லை. இந்தியாவின் பேச்சுக்கு மதிப்பளிக்காத இலங்கையை நட்பு நாடாக கருத முடியாது என்று அவர் தெரிவித்தார். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மக்கள் மகிழ்ச்சியாக உள்ளபோதும்

# இராணுவம் வெளியேறுவதை விரும்புகின்றனர்

**இந்திய ஊடகவியலாளர் குழு தெரிவிப்பு**

(கொழும்பு)

வடக்கு மக்கள் முன்னரைவிட தற்போது மகிழ்ச்சியாகவுள்ளனர். ஆனால், இராணுவத்தினர் அங்கிருந்து செல்ல வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் இலங்கை விடயத்தில் இந்தியாவோ தமிழகமோ தலையிடக் கூடாது என்றும் வடக்கு மக்கள் கேட்டனர் என்று இந்திய ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் பாலா பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சிறிய எண்ணிக்கையான தமிழகத்தின் ஒரு பிரிவினர் இலங்கையை எதிர்க்கின்றனர் என்பதற்காக முழு இந்தியாவும் இலங்கையையோ அல்லது மக்களையோ எதிர்ப்பதாக கருதக்கூடாது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சிறந்த நெருக்கமான உறவு காணப்படுகின்றது. தமிழகத்தின் ஒரு சிறு எண்ணிக்கையான பிரிவினரே குழப்ப்ங்களை ஏற்படுத்துகின்றனர். அது இந்தியாவின் பிரதிபலிப்பு அல்ல என்றும் அவர் கூறினார்.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த 30 பேர் கொண்ட இந்திய ஊடகவியலாளர் குழுவினர் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஊடகவியலாளர் குழுவில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் ஊடகவியலாளர்கள் இடம்பெற்றிருந்தனர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதேவேளை, இந்தியாவின் ஒரு மாநிலமான தமிழகத்தில் 6 கோடி மக்களேயுள்ளனர். ஆனால், இந்திய சனத்தொகை 100 கோடிகளை தாண்டியது. இந்நிலையில் தமிழகத்திலுள்ள ஆறு கோடி மக்களிலும் சிறு எண்ணிக்கையானோரே இலங்கை விடயத்தில் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

அதனை இந்தியாவின் எதிர்ப்பு என்றோ அல்லது இந்திய மக்களின் நிலைப்பாடு என்றோ கருதிவிடக் கூடாது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை.

எனவே, இந்தியா இலங்கையுடன் எந்த வகையிலும் பிரச்சினையுடன் உள்ளது என்று எவரும் கருதக்கூடாது. ஒரு மாநிலத்தில் ஒரு சிறிய பிரிவினருடன் புரிந்துணர்வு காணப்படுகின்றது. மேலும் தமிழகத்தில் அதிகளவான மக்கள் இலங்கையை எதிர்க்காத நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

உண்மையில் வடக்கு மக்களின் உணர்வுகளை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். அந்த வகையில் இலங்கை விடயத்தில் இந்தியாவோ தமிழகமோ தலையிடக்கூடாது என்றும் வடக்கு மக்கள் கேட்டனர்.

அதாவது இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடக்கூடாது என்பதே அந்த மக்களின் கோரிக்கையாகவுள்ளது என்றார்.

(அ-2)

# நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா





















யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு வருடந்தோறும் வெளியிடும் நல்லைக்குமரன் மலர் (21) வெளியீட்டு விழா நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஆதீன முதல்வர், சுவாமி சித்ரூபானந்தா, சின்மய மிசன் சுவாமி ஆகியோர் ஆசி வழங்குவதையும் யாழ். திருமறைக்கலா மன்ற இயக்குநர் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாருக்கு மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா யாழ். விருது வழங்குவதையும் நல்லைக்குமரன் மலரை பதிப்பாசிரியர் வெளியிட்டு வைப்பதையும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் சிறப்புரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜெயலக்சுமி ராஜநாயகம் மலரை ஆய்வு செய்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

இந் நிகழ்வில் சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர் பு.ஆறுமுகதாஸ் வரவேற்புரை நிகழ்த்த பொருளாளர் எஸ்.ரகுமார் நன்றியுரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சுற்றுச் சூழல்

மனிதனிடமிருந்து மனிதனைக் காப்பாற்றுவது எப்படி என்ற கவலை போய், மனிதரிடமிருந்து பூமியை காப்பாற்றுவது எப்படி என்பதுதான் இன்றைய கவலையாக உள்ளது.

தற்போது பூமியின் வெப்பம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு காரணகர்த்தா மனிதன்தான். இன்னும் 25 வருடத்தில் பூமியின் வெப்பம் மிகமிக அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் இது சாதாரண விடயமல்ல. இதனால் பல பாதக விளைவுகள் ஏற்படும்.

பூமியின் வெப்பம் அதிகரிக்கும் போது வடதுருவத்திலும் தென்துருவத்திலும் உள்ள பிரமாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும். இதனால் கடல் மட்டும் உயரும் பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலை கூட ஏற்படும். கடலின் ஓரப்பகுதிகள் நீரினுள் மூழ்கக்கூடும்.

உதாரணத்திற்கு கடல்மட்டம் 1 மீற்றர் உயர்ந்தால் பங்களாதேஷ் நாட்டில் 4 இலிருந்து 8 கோடி மக்கள் வேறு இடம் தேடவேண்டிய நிலை ஏற்படும். பூமி வெப்பமடைதலுக்கான காரணம் என்ன?

இயற்கையின் சமநிலை மனிதனால் குழப்பமடைவதே இதற்கான காரணமாகும். நாம் ஒட்சிசனை உள்ளெடுத்து காபனீரொட்சைட்டை வெளிவிடுகின்றோம். மரம்,செடி, கொடி போன்றன காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளியேற்றுகின்றன. இந்த சமநிலை ஒழுங்காக நடந்தால் ஒருவித பாதகமும் ஏற்படாது.

ஆனால் மனிதன் காடுகளை அழிக்கின்றான். இதனால் காற்றில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிக்கின்றது. இதைவிட வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை, தொழிற்சாலைகள் விடும் புகை என்பனவும் காற்றில் கலக்கின்றன.

இதனால் சூரியனிலிருந்து வெளியாகும் அல்ரா வயலட் கதிர்களிடமிருந்து நம்மைப் பாதுகாக்கும் ஓசோன் படை தேய்வடைகிறது.

குளோரோபுளோரோகாபன் (CFC) இரசாயனம், குளிரூட் டிகள், எயார் கண்டிஷனர்,தீயணைப்புக் கருவிகள் போன்றவற்றில் குளிர்ச்சியை ஏற்படுத்த பயன்படுத்து கின்றது. இதுதான் (CFC) ஓசோன் படை தேய்வதற்கான முக்கிய காரணியாகும். ஒரு மூலக் கூறு குளோரோ புளோரோ காபன் (CFC) ஆனது ஒரு இலட்சம் ஓசோன் ($O_3$)மூலக்கூறுகளை அழிக்கவல்லதாம். இதற்கு ஒரு மாற்றுப் பொருள் கண்டு பிடிக்க வேண்டும்.

இயற்கையுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை இப்பொழுது உலகத்தலைவர்களெல்லாம் ஒன்று கூடி ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந்தியாவின் குஜராத் வடபகுதியில் ஆரவல்லிக் குன்று சரிவின் மையத்தில் மிருகங்கள், பறவைகளுக்கென்று ஒரு கோயில் உள்ளது. அதில் பறவைகளினதும் மிருகங்களினதும் சிற்பங்கள் இருக்கின்றன. கர்ப்பக்கிரகத்திலும் அதே சிலைகள்தான் உள்ளன. அங்கு வணங்கப்படும் தெய்வங்களும் பறவைகளும் விலங்குகளும் தான். இவற்றின் மதிப்பைப் புரிந்து கொள்வதற்காக தெய்வீகக் கதைகளில் கூட தெய்வங்களின் வாகனமாக பறவைகளும் மிருகங்களும் இருக்கின்றன.

கி.பி 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நீதிசாரம் என்ற நூல் "மரம் வளர்த்தால் நரகம் இல்லை" என்று எழுதப்பட்டிருக்கின்றது. அந்தக் காலத்திலேயே இவற்றின் மகிமையைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் எல்லாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இயற்கையின் படைப்புக்களை அழிப்பதற்கு முயற்சி செய்யக் கூடாது. சில பேர் எதற்கும் கவலைப்படுவதில்லை. எதிலும் அலட்சியமாக இருப்பார்கள். அலுவலக நண்பர் ஒருவரிடம் நான் இதைப்பற்றி சொல்லிக் கொண்டிருந்தேன்.

"இப்படியே போய்க் கொண்டிருந்தால் ஒரு நாள் பெரிய பிரளயமே வந்துவிடும். கடல் கொந்தளிக்கும், சூறாவளி, எரிமலை, பூகம்பம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்" என்றேன். அவர் ரொம்ப சாவகாசமாக என்னைப் பார்த்து அன்றைக்காவது ஒபிஸ் லீவு விடுவாங்களா சேர்? என்கிறார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# மனித உரிமை நிலையம் நடத்தும் மனிதவுரிமைகள் டிப்ளோமா கற்கைநெறி

மனித உரிமை நிலையம் செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் மனித உரிமைகள் பற்றிய டிப்ளோமா கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளதாக சுன்னாகம் மனித உரிமை நிலையம் அறிவித்துள்ளது.

இக் கற்கை நெறி எட்டு மாத கால எல்லையைக் கொண்டது. பிரதி சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம் பெறும் இக்கற்கை நெறியில் விரிவுரைகளுடன் வெளிக்கள ஆய்வுகள், நேர்காணல்கள், சம்பவ ஆய்வுகள், சந்திப்புக்கள், விவாத அரங்குகள், தனிநபர் செயற்பாடுகள் என்பவையும் உள்ளடங்குகின்றன.

பாடநெறி விரிவுரைகளை யாழ்ப்பாணத்தின் பிரபல சட்டத்தரணிகள், கொழும்பின் பிரபல சட்டத்தரணிகள், சட்ட வல்லுநர் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சட்டக்கல்லூரி விரிவுரையாளர்கள் ஆகியோர் மேற்கொள்வர்.

இப் பாட நெறிக்கான கட்டணம் 20 ஆயிரம் ரூபாவாகும். பதிவு கட்டணம் 250 ரூபாவாகும். பாடநெறிக் கட்டணம் மூன்று தவணைகளில் செலுத்தப்படலாம். பாடநெறி முடிவில் பட்டமளிப்பு கொழும்பில் இடம்பெறும். இக் கற்கை நெறியை பயில விரும்புவோர் 0772220358, 0776537232, 0776452474, 0771899325 ஆகிய கைத் தொலைபேசிகளுடன்தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்வதுடன் விண்ணப்பப் பத்திரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.தொடர்புகளுக்கு முகவரி: மனித உரிமைநிலையம், பலாலிவீதி, ஊரெழு, சுன்னாகம் அல்லது மனித உரிமை நிலையம், 90 பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிகளிலும் தொலைபேசி தொடர்புகளுக்கு 021 224 0999, 021 222 8030 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் பாடசாலைச் சிறுவர்களிடையே நாடளாவிய ரீதியில் சித்திரப் போட்டியொன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய தரம் 1 தொடக்கம் 5 வரையான பாலர் பிரிவுக்கு **சிறுவனான நானும் எனது தேசமும்** என்னும் தலைப்பும், தரம் 6 முதல் 10 வரையான கனிஷ்ட பிரிவுக்கு **நாம் காணும் நாளைய இலங்கை** என்னும் தலைப்பும், தரம் 11 முதல் 13 வரையான சிரேஷ்ட பிரிவுக்கு **சிறுவர்களே எமது வலு- நாளைய உலகின் அபிவிருத்தியாகும்** என்னும் தலைப்பும் வழங்கப்பட்டுள்ளது. இவ் ஆக்கங்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்குமாறு "ஆணையாளர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம், இல 69, எஸ்.டீ.எஸ் ஜயசிங்ஹ மாவத்தை, கொஹூவல, நுகேகொட" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

சித்திரங்களை 12×16 அளவு கடதாசியில் வரைய வேண்டும். எவ்வாறான வர்ண உபகரணங்களையும் பாவித்து வரையலாம். சித்திரத் தின் பின்பக்கத்தில் முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, கற்கும் வகுப்பு, பாடசாலை மாவட்டம், பிரதேச செயலகம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு வகுப்பாசிரியர், பாட ஆசிரியர் அல்லது அதிபர் அதனை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். இவ்விடயம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0112853596, 0113082483 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ)

# கரவெட்டிப் பிரதேசத்தில் மீண்டும் நடமாடும் சேவை

கபே அமைப்பின் அனுசரணையுடன் ஆட்பதிவுத் திணைக்களத்தின் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கான மேலுமொரு நடமாடும் சேவை கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் ஏற்கனவே நடைபெற்ற நடமாடும் சேவைகளில் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பம் செய்யத் தவறியவர்கள் மற்றும் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள விரும்பும் பொதுமக்கள் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொள்வதுடன் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 | 120 |
| தக்காளி | 60 | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 60 |
| கோவா | 60 | 70 | 100 | 100 |
| கரட் | 100 | 110 | 120 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 140-160 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 160 | 100 | 120 | 140 |
| பாகற்காய் | 100 | 80 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 200 |
| பீற்றூட் | 30 | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 120 | 100 |
| போஞ்சி | 100 | 160 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | — | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 250 | 220 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 | 120 |

# இராசி பலன்

*22.08.2013*
*(ஆவணி 06, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*பிரதமை காலை 6.36 மணிவரை*
*துதியை பின்னிரவு5.13 மணிவரை*
*சதயம் பிற்பகல் 12.27 மணிவரை*
*இராகுகாலம் 1.35-3.05 மணிவரை*
*சுபநேரம் 7.35-9.05மணிவரை*

**மேடம்** வருமானம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** தொலைபேசி மூலம்பொன்னான தகவலொன்று வந்து சேரலாம், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மிதுனம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**கடகம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உதவுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும்.

**சிங்கம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உடல் நலம் சீராகி உற்சாகம் அடைவீர்கள்.

**துலாம்** பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவ முண்டு, சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகி மன நிம்ம தியைக் கொடுககும்.

**விருச்சிகம்** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், வருமானம் திருப்பி தரும்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம் பவங்கள் இடம்பெறலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்** கல்யாண கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், சுபகாரிய செலவுகள் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், தூரதேச செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், பயணங்களால் மனச் சஞ்சலங்கள் ஏற்படலாம், செய்தொழில் நன்மையுண்டு.

வள்ளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் புலனாய்வாளர்கள் என்னை அச்சுறுத்தினர்

## வேட்பாளர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட் டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் அச்சுறுத் தல் விடுக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட் டுள்ளது.

யாழ்.காரைநகர்ப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் காலை குறித்த வேட்பா ளருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போது அவ்வேட்பாளர் தெரிவிக்கையில்,

நான் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். எனது பெயர் கந்தப்பர் முத்தையாபிள்ளை தம்பிராசா.

எனக்கு இன்றைய தினம் (நேற்று முன் தினம்) பொலிஸ் புலனாய்வாளர்களினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனது நண்பரைச் சந்திப்பதற்காக அவ ரது வீட்டிற்கு நான் சென்றிருந்த வேளை வீதியின் ஓரமாக நின்ற எனது வாகனத்தை சிலர் புகைப்படம் எடுத்துச் சென்றுள்ளதோடு என்னைப் பற்றி பலரிடமும் விசாரித்துச் சென் றுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் உயரதிகாரிக ளிடம் தொலைபேசியூடாக அறிவித்துள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# தேர்தல் சட்ட விதிகளை மீறி நேற்று யாழில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு எதிராக யாழ்.நகர்ப்பகுதியில் வடமாகாணத் தில் சமூகத்துடன் இணைக்கப்பட்ட உறுப்பினர்களின் ஒன்றியம் என்ற அமைப் பினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.**



பொலிஸாரின் பாதுகாப்புடன் தேர்தல் விதிகளை மீறி நடைபெற்ற இவ் ஆர்ப்பாட் டத்தில் கலந்துகொண்ட முன்னாள் போரா ளிகள் சிலர் யாழ்ப்பாணத்தில் கூட்டமொன் றுள்ளது எனக் கூறியே தாம் அழைக்கப்பட்ட தாக தெரிவித்தனர்.

அம்பாறை,மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களை சேர்ந்த முன்னாள் போரா ளிகளும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முன் னாள் போராளிகளுமே இவ்வாறு அழைக்கப் பட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டி ருந்தவர்கள், நாம் இப்போது மனைவி பிள்ளைகளுடன் ஒற்றுமையாய் நிம்மதி யாய் வாழ்கின்றோம், தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு அரசியல்வாதிகளே தேர்தலுக்கு முன் எங்கள் தேவைகளை நிறைவேற்றுங் கள்!, தேர்தல் நெருங்கும் போது மட்டும் எம் மைத் தேடி வீட்டிற்கு வரும் கூட்டமைப்பினரே!, ஆனந்தி சர்வதேசத்தின் கைக்கூலி! எனப் பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கிய கே.மோகன் என்பவர் குரலெழுப்ப, அவரோடு சேர்ந்த ஒரு சிலரும் கூட்டமைப்பிற்கு எதிராக குரலெழுப்பியிருந்தனர்.

சுமார் ஒருமணி நேரம் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்திற்கு யாழ்ப்பாண பொலிஸார் பாதுகாப்பு வழங்கியிருந்ததோடு, வீதி போக்கு வரத்தையும் கண்காணித்தனர். மேலும் இவ் ஆர்ப்பாட்டத்தில் வடக்கு தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் எழிலனின் மனைவி. ஆனந்திக்கு எதிராக பதாகைகளும் காணப்பட்டிருந்தன. (அ-4)

## கால்வாய் அமைத்தல் திடீர் இடைநிறுத்தம்

(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியில் புதிதாக அமைக் கப்பட்டு வந்த கால்வாய் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. முதல் ஒப்பந்தகாரருக் கும் இரண்டாவது ஒப்பந்தகாரருக்கும் இடை யில் ஏற்பட்ட சம்பளப் பிரச்சினை காரணமாக இப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

மழைக் காலம் நெருங்கிவருவதால் அமைக் கப்பட்ட வடிகால்களில் நீர் நிரம்பி வியாபார நிலையங்களில் நீர் புகக் கூடிய வாய்ப்புள்ள தாகவும் நுளம்புகள் பெருகும் அபாயமுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் காரணங்கள் வியாபாரத்துக்கு இடை யூறை விளைவிக்கும். ஆதலால் சம்பந்தப் பட்ட அதிகாரிகளை உடனடியாக இக் கால் வாய் விடயத்தில் நடவடிக்கை எடுக்கும்படி பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (ஆ-60)




# ஞானம்ஸ் வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது கழுகு அணி



(கரவெட்டி)

கரவெட்டி ஞானம்ஸ் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஐங் கரா அணியை 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று வல்வெட்டித்துறை கழுகு அணி சம் பியனாகியது.

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழ கம் நடத்திய அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கரவெட்டி ஞானசாரி யார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கரவெட்டி ஐங்கரா அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை கழுகு அணி மோதியது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடிய ஐங்கரா அணி 10 ஓவர்களில் 7 விக் கெட்டை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரவீந்திரன் 20, ரகுவர்மன் 19, தீபன் 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

கழுகு அணியின் பந்து வீச்சில் செந் தூரன் 3, நந்தபாலன் டிலக்ஷன், ரமேஸ் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கழுகு அணி 8.1 பந்துகளில் வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் கோகுலன் 39, றமேஸ் 18, திவாகர் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஐங்கரா அணியின் பந்து வீச்சின் சார்பில் திருமாறன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக கழுகு அணி யின் கோகுலன் , தொடர் நாயகனாக ஐங்கரா அணியின் ஜீவகன், சிறந்த பந்துவீச்சாளராக, சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக அதே அணி யின் ஜெயதர்ஷன், ஜீவகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-9-24)

## பொது இடத்தில் மது அருந்திய அறுவருக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி வல்வெட்டித்துறை பொலிஸ் பிரி வில் பொது இடத்தில் மது அருந்திய 6 பேருக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த 6 நபர்களும் வெவ்வேறு இடங் களில் மது அருந்திவிட்டு, பொது மக்களுக்கு இடையூறு விளைவித்ததாக குற்றம் சுமத்தப் பட்டு, வழக்கு விசாரணைக்காக பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீத வான் குறித்த நபர்களுக்கு தலா 5 ஆயிரம் வீதம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித் தார். (அ-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடும் இறுவெட்டு வெளியீடும்

மணியம்பிள்ளையின் தமிழோடு இசைபாடு நூல் வெளியீடும் மூன்றிழை இறுவெட்டு வெளியீடும் இன்று வியாழக்கிழமை மாலை 4.15 மணிக்கு நெடுந்தீவு முகிலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆய்வுரையை புலவர் எ.டபி ஏ்யூ அரியநாயகமும் வெளியீட்டுரையை நெடுந்தீவு மகேசும் ஆற்றவுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 2 ஆம் திகதி கனடாவில் மேற்படி நூலும் இறுவெட்டும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)






# டி.சி.டி.பரிசோதனையின் பின்பே பால்மா சந்தைப்படுத்தப்படும்

## சுகாதார அமைச்சின் ஆலோசனைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

**டி.சி.டி பரிசோதனைக்குட்படுத்தப்படாமல் எந்த ஒரு பால்மா வகையையும் துறைமுகத்தில் இருந்து சந்தைக்கு விடுவிக்க அனுமதிப்பதில்லை என சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனைக்குழு தீர்மானித்துள்ளது.**

சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபாலவின் தலைமையில் கூடிய உணவு ஆலோசனை குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தருவிக்கப்படும் சகல பால்மா வகைகளும் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டு அவற்றின் மாதிரிகள் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றன. இவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட 7 வகை பால்மா மாதிரிகள் தொடர்பான ஆய்வறிக்கைகள் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தன.

குறித்த ஆய்வறிக்கைகள் குறித்து உணவு ஆலோசனைக்குழுவில் ஆராயப்பட்டதோடு சம்பந்தப்பட்ட பால்மா வகைகளை சந்தையில் விற்பதற்கு அனுமதி வழங்கவும் இங்கு முடிவு செய்யப்பட்டது.

குறித்த 7 வகை பால்மா வகைகளையும் துறைமுகத்தில் இருந்து சந்தைக்கு அனுப்ப அனுமதிக்குமாறு சுங்கப்பிரிவுக்கு அறிவித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு கூறியது.

இலங்கைக்கு தருவிக்கப்படும் சகல பால்மா வகைகளும் தொடர்ந்து ஆய்வுக்குட்படும் எனவும் டி.சி.டி இரசாயனம் தொடர்பான அறிக்கை முடிபுப்படி மட்டுமே அவற்றுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்தது.

இதவேளை வே புரோட்டின் அடங்கிய பாலுணவுப் பொருட்கள், மேலதிக போஷாக்கு உணவு வகைககள் குறித்து பொரளை மருத்துவ ஆய்வு நிறுவனத்தினூடாக தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை இரு உணவு மாதிரிகள் குறித்து அறிக்கை கிடைத்துள்ளதோடு நேற்று மேலும் ஐந்து வே புரோட்டின் பரிசோதனை தொடர்பான ஆய்வறிக்கை கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

குறித்த உணவுப் பொருட்களில் வே புரோட்டின் கிடையாது என உறுதியானால் மட்டுமே அவற்றை சந்தையில் விற்க அனுமதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகின்றது. (அ-2)


திருவருள் மிகு வெற்றிலைக்கேணி முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் ஆலய மணவாளக்கோல விஞ்ஞாபனம் 24.08.2013 (சனிக்கிழமை)

விநாயக அடியார்களே!

வரலாற்று சிறப்பு மிக்க மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயம் நாட்டில் யுத்த சூழல் காரணமாக கோயிலுக்கு செல்ல முடியாத காரணத்தால் ஆலய குருக்கள் ஆகிய நாம் ஆலய ஐம்பொன் விக்கிரகங்களை எடுத்துச் சென்று நாம் வாழுகின்ற தம்பசிட்டி வத்தனைப்பிள்ளையார் ஆலயத்தில் வைத்து நித்திய, நைமித்திய வழிபாடுகள் செய்து வருகின்றோம்.

ஆவணி மாத மணவாளக் கோலம் மிக்ச் சிறப்பாக சங்காபிஷேகம், பண்டகப் படி, அன்னதானம் என்பவற்றை விநாயகப் பெருமான் திருவருளால் செய்து வந்தோம். இவ்வாண்டு மணவாளக் கோலத்தை மண்டலாய்ப்பிள்ளையார் ஆலயத்தில் செய்வதற்கு பெருமான் திருவருள் கூடியுள்ளார். அதற்கு வேண்டிய பண உதவி, பொருள் உதவி, சரீர உதவி என்பவற்றை ஆலய திருப்பணிச் சபை அங்கத்தவர்களும் பொது மக்களும் தந்துதவி இவ்விழாவைச் சிறப்பாகச் செய்ய ஒத்துழைக்குமாறு மிக அன்பாக வேண்டிக் கொள்கிறோம்.

இவ்விழாவில் பங்கு கொள்ள விரும்பும் அடியார்கள் மூன்று நாட்களுக்கு முன் ஆலய குருக்களுடன் தொடர்பு கொள்ளவும்.

மங்களவாத்தியம்
முருகதாஸ் குழுவினர்
தொ.பே.இல.0779791044

இப்படிக்கு
ஆலயக்குருக்கள்
இ.மண்டலேஸ்ரக் குருக்கள்

(சி/4408)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம்:- 12, ஆதன இலக்கம்:- 59
முருகமூர்த்தி கோயில் வீதி

வட்டாரம் 12 முருகமூர்த்தி கோயில் வீதி ஆதன இலக்கம் 59 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை நொச்சியொல்லை எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு இரண்டு (2 கொண்ட ஆதனம்) இவ்வாதனமானது நவாலியைச் சேர்ந்த குணசிங்கம் பெண் இராசலட்சுமி என்பவரால் அறுதி உறுதி நவாலியைச் சேர்ந்த நல்லையா பெண் கனகரத்தினம் ஆகிய இவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் இராசேந்திரன் வசந்தசேனன் முகதாவில் நிறைவேறிய 121 ஆம் இலக்க 1979.11.08 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்.

இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் நல்லையா பெண் கனகரத்தினம் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். (3657)

தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

## பௌர்ணமி விழா

கலட்டி ஐக்கிய சன சமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30மணிக்குஜெயச்சந்திரன் மண்டபத்தில் தலைவர் சி.ஜி. திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியர்கள்திரு. திருமதி. நவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகசட்டத்துறைத்தலைவர் கலாநிதி த.கலாமணி பிள்ளை வளர்ச்சியில் பெற்றோரின் வகிபாகம் எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். மேலும் சிறுவர்களின் நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (அ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்:சுவாதி 4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS<br>வைத்தியர் சைவபோசனம்<br>தொ.இ:B2273 | பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்:அத்தும் 4<br>கி.பா : 23.75 சூ,செவ் 11<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, Following BIT ஆசிரியை<br>தொ.இ:G2265 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>உயரம்: 5'3" சூ, செவ் 8<br>தகைமை/தொழில்: BSc<br>வியாபாரம்(சொந்தம்)<br>தொ.இ:B2274 | பிறப்பு: 1985 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா :77 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, College ஆசிரியை<br>தொ.இ:G2267 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா :20.75 உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc<br>Engineer சிங்கப்பூர் PR<br>தொ.இ:B2275 | பிறப்பு: 1991 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா :58 சூ,செவ் 1<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/Lவங்கி<br>தொ.இ:G2272 |
| பிறப்பு: 1984 இந்து(KO)<br>நட்சத்திரம்:திருவோணம் 4<br>கி.பா :12.5 செவ் 4<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L ஜேர்மன்PR<br>தொ.இ:B2276 | பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்:உத்திராடம் 2<br>கி.பா :84 செவ் 1 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/Lகணனி இயக்குநர் தனியார்<br>தொ.இ:G2277 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி





புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!
அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231 , Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003
(3587)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாய்பாதம்



ஆன்மீகம் 93

...இங்கு வந்தவுடன் நான் மெய் மறந்து விட்டேன். என்ன நடந்தது என்றே புரியவில்லை என்றேன். என்ன நடக்கணுமோ அது நடந்திருச்சி. அதோ உன் உடைகள்- அணிந்து கொள் என்றார் ஆசான். அப்போது தான் நான் பிறந்த மேனியில் இருப்பது தெரிந்தது. பாய்ந்தெடுத்து ஒரு தனியிடத்தில் உடைகளை எடுத்து உடுத்திக்கொண்டேன். என்மேல் உள்ள ன்பு உள்ள ஒரு நண்பர் அங்கு வந்தார். அவர் என்ன ராஜா! என்னாச்சி? திடீர்னு துணியெல்லாம் கழட்டி வீசினீங்க. ஏதோ சாமி வந்ததுபோல அம்மா தாயேன்னு கூவிக் கதறி அழுதீங்க. எங்கள் கண்ணீரால் உங்கள் முகமே நனைந்தது. திடீர் என்று நடனமாடத் துவங்கினீங்க. பாம்பு சீறுவதைப் போன்று சீறினீங்க. இதைப் பார்த்து நாங்கள் எல்லோரும் ஆடிப்போய் விட்டோம். ஆனால், சித்தர் சாமி அமைதியாக உங்களைப் பார்த்தவாறு புன்னகையுடன் புகைப் பிடித்துக் கொண்டிருந்தார். உங்கள் ஆட்டம் அதிகமாயிற்று. அப்புறம் தான் சாமி உங்களைத் தொட்டு உங்களைக் கூப்பிட்டார். என்று கூறினார். இதைக் கேட்டு சற்று நாணிய நான் அவரிடம் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது என்று தன்நிலை விளக்கம கூறி மற்றவர்களிடமும் நான் கூறியதை எடுத்துச் சொல்லுமாறு அந்த நண்பரை பணிவுடன் கேட்டுக் கொண்டேன்.

பிறகு ஆசானை அடைந்து அவரிடம் அந்த இடத்தைப் பற்றி மேலும் விபரங்களைக் கேட்டேன். அதற்கு அவர் விளக்கங்களைக் கூறிவிட்டு இவ்விடத்தில் மனோன்மணி தாயை அவள் மந்திரத்தால் ஒருலட்சம் உரு கொடுத்து ஒருமனதாய் உளமாற பக்தியோடு தாயை பசியால் அழைக்கும் சேயாக வழிபாட்டால் அவள் நேரில் வந்து அருள் புரிவாள். இந்த காலத்தில் யார் இதை செய்யப் போகிறார்கள். எல்லா மனிதர்களும் அவசரத்திற்கு பிறந்த மாதிரி கண் மூடித்தனமான வேகத்தில் பணம், புகழ் என்று அலைகிறார்கள் என்று வருந்தினார்.



தாய்பாதத்தில் அன்னை சித்தர்

என்க்கு அது ஒரு சவால் மாதிரி இருந்தது. ஆனால், லட்சம் உருகொடுத்து ஜபிக்க தற்போதைய சூழ்நிலையில் நேரம் கிடைக்காதே என்று மனம் வருந்தியது. அதேநேரம் என் மனதினுள் இமயமென எழுந்து நின்ற ஒரு வினாவிற்கு விடையறிய வெகு நாட்கள் வேட்கையுற்றிருந்தாலும் அதை ஆசானிடம் கேட்க அஞ்சி அமைதி காத்தேன். இனியும் காத்திருக்க பொறுமையற்றமையால் வினாவை ஆசானிடம் கேட்டேன். சாமி இன்று எனக்கு ஏற்பட்ட மெய்மறந்த நிலை புதிதல்ல. இதனால் நான் பெற்ற பேரானந்தத்தை மற்றவர்களுக்கு எப்படி உணர்த்துவது எனத் தெரியவில்லை. அவர்களோ நான் நடிப்பதாக நினைக்கிறார்கள். சினிமாக்காரன் என இழிவுபடுத்துகின்றார்கள். இப்படி என்னை மறக்கும் நிலை ஏற்படும் போதெல்லாம் நான் பிறந்த மேனியாக காட்சிப் பொருளாகி மற்றவர்களால் இகழப்படும் நிலை எனக்கு ஏன் ஏற்படுகிறது? இப்படி என்னை மறக்கும் நிலை எனக்கு வரவர அதிகரித்துக் கொண்டிருக்கிறதே? ஏன் என்றேன். அதற்கு ஆசான் ராஜா இது எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. குழந்தைகள், பைத்தியக்காரர்கள், மதுவின் ஆதிக்கத்தில் கட்டுண்டு கிடப்பவர்கள், சித்தர்பெருமான் ஆகியோருக்கு உடையின்றி மற்றவர் முன் உலாவினால் அது அவர்களுக்கே தெரியாது. எல்லாவற்றிற்கும் காரணம் மனம்தான். மனம் அதைகொன்றால் தினம் ஏது? உறவேது? இது ஞானத்தின் உச்ச நிலை. பிறக்கும் போதும் நாம் உடையணிந்து வருவதில்லை. இறக்கும் போது இடுகாட்டிலும் உடையை பறித்துக்கொள்வார்கள். உண்மை அப்படியிருக்க நடுவில் வந்த உடை, மானம், நாணம், எல்லாம் சாதாரண மனிதர்களுக்குத்தான் அவசியம்.

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

---

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

**இலங்கை அரசின் நிலைப்பாடு**

...இல்லாவிடில் அந்த அரசு உண்மையில் அரசியல் தீர்வுக்கு தயாராக இல்லை என்ற உண்மை உலகிற்கு தெரிய வந்துவிடும் அல்லவா? மேலும் அப்பொழுது விடுதலைப் புலிகள் கிட்டத்தட்ட முழு ஈழத்தையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர். அப்போது இலங்கை அரசின் சட்ட அமைச்சராக



இருந்த தற்போதைய வெளியுறவுத் துறை அமைச்சராக உள்ள பெரிஸ், தனிநாடு அல்லாத எந்தவொரு கூட்டாட்சித் தீர்வுக்கும் தாங்கள் தயார் என்றும் அதிகாரப் பகிர்வில் வானமே எல்லை என்றும் கூறினார்.

விடுதலைப்புலிகள் அமைப்பினரும் உள்ளக தன்னாட்சி உரிமை கொண்ட ஒரு கூட்டாட்சி தீர்வு குறித்து பரிசீலிக்க தயாரா இருந்தனர். அதன்படிதான் அந்த இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான தமிழ்ச்செல்வன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச்சென்று கூட்டாட்சி அரசியலமைப்பு சிறப்பாக செயற்படும் சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளின் அரசியலமைப்பு சட்டங்களை குறித்தும் அவை செயற்படும் முறை குறித்தும் பயின்று வந்தார். இது அவர்கள் அத்தகைய ஒரு தீர்வை பரிசீலனை செய்யத் தயாராக இருந்துள்ளனர் என்பதைக் காட்டும் சான்றாகும்.

ஆனால், இப்பொழுது இலங்கை அரசு என்ன கூறுகின்றது என்பதை பாருங்கள்! இலங்கையில் சிங்களவர், தமிழர் என்று இன மக்கள் யாரும் இல்லை என்றும் இலங்கையர் மட்டுமே உள்ளனர் என்றும். இனப் பிரச்சினை என்று ஒன்று இல்லையென்றும் ராஜபக்ச அரசு கூறுவது இங்கு இணைத்துப் பார்க்கத்தக்கது. இதன் பொருள் என்ன? முழு இலங்கைத் தீவும் பெரும்பான்மையினரான சிங்களவரின் அதிகாரத்திற்குட்பட்டது என்பதுதானே?

இதே அரசு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதுதான் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையே தவிர, வேறு எந்த அரசியல் பிரச்சினையும் இல்லையென்று அறிவித்ததும் அறிந்ததே.

ஆனால், உண்மையில் நடந்துள்ளது என்ன? கனடா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் சுமார் 50,000 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான நிதிகளை இலங்கை அரசிடம் வழங்கி, 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் சில நூறு வீடுகளே அந்த அரசால் கட்டப்பட்டன.

ஆனால், அதே சமயத்தில் இலங்கை அரசால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதும் மேலும் மேலும் பல புத்தவிகாரைகள் அமைக்கப்பட்டு வருவதும் இணைத்துப் பார்க்கத் தக்கது.

தொடர்ந்து தமிழர் தாயகத்தை சிங்களமயமாக்கும் வேலையினை முழுவீச்சில் செயற்படுத்தி வருகிறது. இவை அந்த அரசின் கொடிய சிங்கள இனவாத முகத்தினைக் காட்டுவதோடு பன்னாட்டு சமூகத்தின் எந்த விமர்சனத்திற்கும் அஞ்சாத நடத்தையினையும் காட்டுகிறது அல்லவா?

இவ்வாறு சிங்களத்தரப்பு என்றும் இன்றும் ஈழத்தமிழர்களின் இருப்பையும் அவர்களது அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகளையும் அவற்றை பாதுகாக்கும் அரசுமையை என்ற அவர்களது கூட்டுரிமையையும் ஏற்றுக்கொள்ளத் தயாரா இல்லை என்பதை காட்டிவருகின்றனர்.

**13-வது திருத்தம்**

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13-வது திருத்தத்தின்படி புதியதாக மாகாண ஆட்சி மன்றங்கள் அமைக்கப் பட்டன.

இந்த மாகாண ஆட்சி மன்றங்கள் இலங்கையின் பிற சிங்கள பரப்பிலும் அமைக்கப்பட்டது போன்றே தமிழர்களின் தாயகமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் தலா ஒரு மாகாண ஆட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் இலங்கை அரசியலமைப்பு சட்டத்தின் ஒன்றிய அரசியலமைப்பு என்ற அதன் அடிப்படைத்தன்மையில் எந்த மாற்றமும் செய்யப் படவில்லை. இம்மாகாணங்களையும் இவற்றின் ஆட்சி அதிகார ஆள்வரையினையும் கூட்டாட்சி நாட்டில் ஒரு மாநிலத்திற்கும் அதன் அரசுக்கும் இணையாகக்கூட அல்ல, இந்தியாவில் உள்ளது போன்ற அரைக் கூட்டாட்சி நாட்டில் இருக்கும் ஒரு மாநில அரசிற்கு இணையாக கூட ஒப்பிட முடியாது. இதனைத்தான் இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கும் கூட்டாட்சி ஏற்பாடு என்றும் அது ஈழத் தமிழர்களின் அரசியல் பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகளை மீட்டுக்கொடுத்துள்ளது என்றும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொடரும்

ஆய்வாளர் சு. அருணாச்சலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

553

## குதிரை போட்ட முட்டை



இரவு நேரம் வந்தது. சீடர்கள் ஐவரும் ஒன்றாகப் படுத்து இருந்தார்கள். அவர்கள் யாருக்குமே தூக்கம் வரவில்லை.

ஏமாற்றுக்காரன் ஒருவனால் நம் குரு பிரம்படிபட்டாரே. இதை நினைத்தால் என் உள்ளம் துடிக்கிறது என்று வருந்தினான் மிலேச்சன்.

பெருமைக்குரியவர் நம் குரு. முதியவரான அவரை நடத்தி அழைத்துச் சென்றது நம் தவறு. அதனால்தான் அவருக்கு இந்த துன்பம் ஏற்பட்டது என்றான் பேதை.

நாம் ஆற்றங்கரையில் அழுது கொண்டிருந்தோம். அப்பொழுது குதிரையில் ஒருவன் வேகமாக வந்தான். ஆற்றைக் கண்டு அஞ்சாமல் சென்றான்.

அதைப்போன்ற குதிரை நம் குருவிற்கு வாங்க வேண்டும். அவர் குதிரையில் அமர்ந்து வந்தால் நமக்கும் பெருமையாக இருக்கும் என்றான் மடையன்.

நம் குருவிற்கு எப்படியாவது குதிரை வாங்கியாக வேண்டும் என்றான் மூடன்.

நாம் குதிரை வாங்கினால் குரு ஏற்றுக்கொள்வாரா? எளிமையை விரும்பும் அவர் அதில் அமர்ந்து வருவாரா என்ற ஐயத்தை எழுப்பினான் மட்டி.

நாம் எல்லோரும் சேர்ந்து வற்புறுத்தினால் அவர் ஒப்புக்கொள்வார் என்றான் மடையன்.

சீடர்களின் வேண்டுகோளை அவர் மறுக்க மாட்டார் என்றான் பேதை.

நல்ல குதிரையைத் தேடுவதுதான் இனி நம் வேலை என்றான் மிலேச்சன்.

இப்படிப் பேசிக்கொண்டே அவர்கள் தூங்கத் தொடங்கினார்கள். பொழுது விடிந்தது. ஐந்து சீடர்களும் குருவை வணங்கினார்கள்.

குருவே! நீங்கள் நடந்து செல்வதைக் காண எங்கள் உள்ளம் துடிக்கிறது. எப்படியாவது ஒரு குதிரை வாங்க வேண்டும். நீங்கள் அதில் அமர்ந்து வர வேண்டும். சீடர்களாகிய எங்களின் வேண்டுகோளை நீங்கள் மறுக்கக்கூடாது என்று வேண்டினான் மூடன்.

குருவே! குதிரை இருந்தால் நீங்கள் பல ஊர்களுக்கு எளிதாகச் செல்லலாம். உங்கள் அருளுரையைக் கேட்டு உலகமே நல்ல வழியில் நடக்கும் என்றான் மட்டி.

மற்ற சீடர்களும் குருவே! உங்களுக்குக் குதிரை வாங்கியே ஆகவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

சீடர்களின் அன்பில் நெகிழ்ந்தார் அவர். அன்புச் சீடர்களே! குதிரையில் அமர்ந்து செல்ல எனக்கும் ஆசைதான். ஒரு குதிரையின் விலை நூறு பணம் இருக்கும். அவ்வளவு பணத்திற்கு நாம் எங்கே போவது? என்று கேட்டார்.

குருவே! எங்கள் திறமையைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். நாங்கள் ஐவரும் இன்றிலிருந்து இதே வேலையாக அலைகிறோம். குறைந்த விலைக்குக் குதிரையை வாங்கி வருகிறோம். பணம் இல்லையே என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்றான் மடையன்.

குறைந்த விலையில் குதிரை கிடைத்தால் வாங்கலாம் என்றார் அவர்.

அன்றிலிருந்து குதிரை வாங்கும் சிந்தனையாகவே இருந்தார்கள் சீடர்கள்.

சில நாட்கள் சென்றன. மடத்திற்குச் சொந்தமான மாடுகள் வழக்கம் போல மேயச் சென்றன. அவற்றுள் ஒரு மாடு மட்டும் மடத்திற்குத் திரும்பவில்லை.

அந்த மாட்டைத் தேடிச் சீடர்கள் புறப்பட்டார்கள். மாடு எங்கும் கிடைக்காததால் அவர்கள் ஒவ்வொருவராக மடத்திற்குத் திரும்பினார்கள்.

மூடன் மட்டும் மாட்டைத் தேடிப் பல இடங்களில் அலைந்தான். காட்டுக்குள் மாடு சென்றிருக்க வேண்டும். அங்கே சென்று தேடுவோம் என்று நினைத்தான் அவன்.

காட்டிற்குள் நீண்ட தொலைவு நடந்தான். அங்கே ஒரு தோட்டம் இருந்தது. அதில் பூசனிக்கொடிகள் படர்ந்து இருந்தன. அவற்றில் பெரிது பெரிதாகக் காய்கள் காய்ந்து இருந்தன. அருகே நான்கைந்து கழுதைகள் மேய்ந்து கொண்டிருந்தன.

இதற்கு முன் அவன் கழுதைகளைப் பார்த்தது இல்லை. அவற்றை மட்ட சாதிக் குதிரைகள் என்று நினைத்தான். பூசனிக் காய்களைக் குதிரை போட்ட முட்டைகள் என்று நினைத்தான்.

தன் எண்ணம் சரிதானா என்று அறிந்து கொள்ள நினைத்தான்.



அங்கிருந்த தோட்டக்காரனிடம் குதிரைகள் தானே அங்கே மேய்கின்றன. கீழே கிடப்பவை அவை போட்ட முட்டைகள் தானே என்று கேட்டான்.

அவனை மேலும் கீழும் பார்த்தான் தோட்டக்காரன்.

கழுதைகளைக் குதிரைகள் என்கிறான். பூசனிக்காய்களைக் குதிரை முட்டைகள் என்கிறான். பார்ப்பதற்கு முட்டாளாகத் தெரிகிறான். இவனுடன் கேலி பேசி மகிழ வேண்டும் என்று நினைத்தான்.

ஐயா! உமக்கு மிகுந்த அறிவு உள்ளது. அதனால்தான் மேய்பவை குதிரை என்றீர். கீழே கிடப்பவை குதிரை முட்டைகள் என்றீர். இத்தகைய அறிவு யாருக்கு உள்ளது என்று சொல்லிச் சிரித்தான்.

கேலியை உணராத மூடன், ஐயா! இந்த முட்டைகளிலிருந்து எத்தனை நாளைக்குள் குட்டி வெளியே வரும் என்று கேட்டான்.

ஐயோ! இப்படிப்பட்ட முட்டாளா? என்று சிரிப்பை அடக்கிக் கொண்டான் தோட்டக்காரன்.

### பரமார்த்த குரு கதைகள்

இந்த முட்டையைக் கவனமாக அடை காக்க வேண்டும். முப்பது நாட்களுக்குள் குதிரைக் குட்டி வெளியே வரும் என்றான்.

முப்பது நாட்களுக்குள் குட்டி வருமா? ஒரு முட்டையின் விலை என்ன? என்று கேட்டான் மூடன்.

ஒரே விலை ஐந்து பணம்.

ஐயா! நான் பரமார்த்தகுருவின் சீடர்களில் ஒருவன். என் பெயர் மூடன். குருவிற்குக் குதிரை வாங்க எங்களிடம் பணம் இல்லை. குதிரை முட்டை ஒன்றை விலை குறைத்துக்கொடுங்கள். எங்கள் குருவின் வாழ்த்து உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் வளமாகவும் நலமாகவும் வாழ்வீர்கள்.

குருவிற்கு என்று கேட்பதனால் மூன்று பணத்திற்குத் தருகிறேன். என்றான் அவன்.

நான் மடத்திற்குச் சென்று பணத்துடன் வருகிறேன். அதற்குள் குதிரை முட்டைகளை விற்றுவிடாதீர்கள் என்று வேகமாகப் புறப்பட்டான் மூடன்.

ஓட்டமும் நடையுமாக மூச்சிறைக்க மடத்திற்கு வந்தான் மூடன் குருவே! குறைந்த விலையில் குதிரை கிடைத்துவிட்டது. நம் வேண்டுதல் நிறைவேறிவிட்டது என்று உரத்த குரலில் கத்தினான்.

அப்படியே குருவின் திருவடிகளில் விழுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.

# விசாரணைகளின் போதான சித்திரவதைகளை இலங்கை பொலிஸார் நிறுத்த வேண்டும்

## சர்வதேச மனித உரிமை அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

**விசாரணைகளின் போது சித்திரவதையை ஒரு வழி முறைக்கேனும் பயன்படுத்துவதை இலங்கையில் பொலிஸார் நிறுத்த வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு ஒன்று கோரியுள்ளது.**

இலங்கையில் 1998 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்ட சுமார் ஆயிரத்து 500 பேர் தொடர்பான சம்பவங்களை ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் தொகுத்துள்ளது.

அத் தொகுப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி. தமிழோசை செய்தி வெளியிட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக , மிகவும் அதிக சித்திரவதைக்கு ஆளான 400 பேர் எதிர்கொண்ட பிரச்சினைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் பொலிஸாரின் சீரமைப்பு குறித்து பொது மக்களிடையே ஒரு விவாதத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என்று அந்த ஆணையகத்தைச் சேர்ந்த பசில் பெர்னாண்டோ பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

இதற்காக இலங்கை அரசுக்கு உதவ சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் தமது ஆணையகம் கோரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறிய குற்றங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் கூட, பொலிஸாரால் தாங்கள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டதாக அந்த ஆணையகத்திடம் சாட்சியமளித்துள்ளனர்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் நடத்தப்பட்ட தாக்குதலின் பாதிப்பு இன்றளவும் உள்ளது என்றும் சாட்சியம் அளித்தவர்கள் தெரிவித்துள்ளதாக அந்த ஆணையகம் ஆவணப்படுத்தி வெளியிட்டுள்ள புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

பொலிஸார், பலரை நிர்வாணமாக்கி கொடூரமாக தாக்கியதாகவும், அதன் தாக்கம் இன்றளவும் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் தொடருகிறது என வும் சாட்சியம் அளித்த பலர் தெரிவித்துள்ளதாகவும் அந்தப் புத்தக் கத்தில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய சித்திரவதைகளை எதிர்கொண்டவர்களின் கதைகளை ஆவணப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமையாலேயே இதனைத் தாங்கள் முன்னெடுத்ததாக பசில் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

### சீனா பயணமாகிறார் சோமவன்ச அமரசிங்க

(கொழும்பு)

ஜே.வி.பி.கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சீனாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

உயர்மட்ட சர்வதேச மாநாடு ஒன்றில் பங்கேற்பதற்காக அவர் அங்கு சென்றுள்ளதாக ஜே.பி.வி. ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொண்டு சோமவன்ச அமரசிங்க சீனா விஜயம் செய்துள்ளார்.

சோசலிஷ கட்சிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர்மட்ட மாநாட்டில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இம் மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். இந்த மாநாடு பத்து நாட்கள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

### கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்),

உருக்களின் உலகம் கல்விசார் கண்காட்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக நூலக விழிப்புணர்வு நிறுவகத் தலைவர் அறிவித்துள்ளார். (அ)

### விபத்தில் ஒருவர் பலி; எண்மர் காயம்

(கண்டி)

கண்டி,தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருதெனிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ள வாகன விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், 8 பேர் காயமடைந்துள்ளனர்.

முச்சக்கரவண்டியொன்றுடன் லொறியொன்று மோதியுள்ளது. இந்த நிலையில் குறித்த முச்சக்கரவண்டி மோட்டார் வண்டி ஒன்றுடனும் பேருந்து வண்டி ஒன்று டனும் மோதி விபத்துக்குள்ளானது.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த செல்வராஜ் மோகன் (வயது 26) என்பவரே இந்த விபத்தில் மரணமடைந்துள்ளார். இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

### ஜகார்த்தா கோட்பாட்டை இலங்கையும் ஏற்றுக்கொண்டது

(கொழும்பு)

மனிதர்களின் சந்தேகத்துக்கு இடமான நடமாட்டங்களைத் தடுப்பது தொடர்பான கைது செய்தல், தடுத்து வைத்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல் ஆகிய செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையிலான ஜகார்த்தா கோட்பாட்டை இலங்கை உள்ளிட்ட 13 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் இடம்பெறும் இது தொடர்பான மாநாட்டில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ரவூப்ஹக்கீம் கலந்து கொண்டிருந்தார். இதன்போது சந்தேகத்துக்கு இடமானமுறையில் நடமாடுகின்றவர்களை உடனடியாக கைது செய்யவும், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முன்னர் தடுத்து வைக்கவும், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் வலுச்சேர்க்கும் வகையிலான உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் இலங்கை, பாகிஸ்தான், மலேசியா உள்ளிட்ட 14 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன.

இதே போன்று இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து அகதிகள் ஆட்கடத்தல் செயற்பாடுகளுக்கு உள்ளாக்கப்படாமை தொடர்பான பிராந்திய உடன்படிக்கை ஒன்றும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)



நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு, இலங்கைக்கு வருகைதந்துள்ள தாய்லாந்து இளவரசி தலதாமாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அவருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ ஆகியோர் வழிபாடுகளில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

# உள்நாட்டில் பிரச்சினை தீர்க்கப்படாததால் வெளிநாட்டில் முறையிட வேண்டியேற்பட்டது

## இரா.சம்பந்தன் எம்.பி.தெரிவிப்பு

(திருகோணமலை)

இனப் பிரச்சினைக்கு உள்நாட்டில் தீர்வுகாணப்பட்டிருப்பின் நாம் வெளிநாடுகளுக்கு செல்லும் நிலை ஏற்பட்டிருக்காது. உள்நாட்டில் ஏமாற்றப்பட்டமையினாலேயே நாம் வெளிநாடுகளுக்குச் சென்று பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேசவேண்டியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இருப்பவர்கள் கனடா, இந்தியா உட்பட வெளிநாடுகளில் சென்று பிரச்சினைகள் குறித்து பேசிக்கொண்டிருக்கின்றனர். இதனால் எதுவும் நடக்காது. எமது உள்நாட்டுப் பிரச்சினையை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்துதான் பேசித் தீர்க்க வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 19 ஆம் திகதி நுவரேலியாவில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து குறித்து கேட்டபோதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டா- செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால் நாம் வெளிநாடு செல்லும் நிலை ஏற்பட்டிருக்காது. டட்லி-செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் எமக்கு இத்தகைய நிலை ஏற்பட்டிருக்காது. மேலும் இந்திய- இலங்கை ஒப்பந்தம் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் கூட நாம் வெளிநாடு செல்ல வேண் டிய சூழல் ஏற்பட்டிருக்காது.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழான 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்கு முறைமுக முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிலையில் உள்நாட்டில் பிரச்சினையை தீர்க்க முடியுமென்று நாம் எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும்.

உள்நாட்டில் தீர்வுக்கான வழிகள் மூடப்பட்டமையினாலேயே நாம் வெளிநாடு செல்லும் நிலை ஏற்பட்டது. உள்நாட்டில் உரிய வகையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வந்திருக்குமாயின் நாம் வெளிநாடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.



எனவே, உள்ளூரில் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது என்பதனாலேயே நாம் வெளிநாடுகளுக்குச் சென்று அரசியல் தீர்வுகுறித்து பேச வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே எமது நிலைப்பாட்டுக்கு காரணம் அரசாங்கமேயாகும்.

இது குறித்து சிந்தித்து அரசாங்கம் உரிய வகையில் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வந்தால் நாமும் அதற்கு தயாராகவுள்ளோம். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிவேரிய தாக்குதலுக்கு உத்தரவிட்டவர் துணிவிருந்தால் அதைப் பொறுப்பேற்கட்டும்



## விஜித ஹேரத் எம்.பி. சவால் விடுப்பு

**வெலிவேரியவில் தாக்குதல் நடத்த படையினருக்கு உத்தரவிட்டவர்யார்? துணிவிருந்தால் முன்வந்து பொறுப்பேற்றுக்காட்டுங்கள் என ஜே.வி.பி சவால் விடுத்துள்ளது. பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,வெலிவேரிய சம்பவம் இடம்பெற்று தற்போது பல நாட்கள் கடந்து விட்டன. ஆனால், அரசு இதுவரையிலும் அம்மக்களுக்கான ஒரு தீர்வை முன்வைக்கவே இல்லை. குற்றவாளிகளில் ஒருவரைக்கூட பொலிஸார் கைது செய்து கம்பஹா நீதிமன்றில் முன்னிறுத்தவில்லை.

வெலிவேரிய மக்கள் இன்னமும் அந்த நஞ்சு கலந்த தண்ணீரையே குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணமான தொழிற்சாலையை மூடிவிடுமாறு கட்டளையிட்டுவிட்டதாக அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

ஆனால், இலங்கை முதலீட்டுச் சபையோ அரசாங்கம் இது சம்பந்தமாக இன்னமும் தமக்கு எந்தவித அறிவித்தலும் விடுக்கவில்லை எனக்கூறுகிறது. இதிலிருந்தே அரசின் கபட நாடகம் புரிகிறது.

தற்போது தம்மால் கட்டவிழ்த்துவிடப்பட்ட இந்தக் கொடுமையான செயலை மூடி மறைக்க நினைத்த அரசு ஜே.வி.பியின் மீது வீண் பழி சுமத்தி தப்பித்துக்கொள்ள நினைக்கிறது. அதாவது நாம்தான் படையினரைத் தூண்டிவிட்டு துப்பாக்கிச்சூடு நடத்தச் சொன்னதாக அரசாங்கம் வெளியுலகிற்கு கூறிக்கொண்டு வருகிறது.

இது மிகவும் முட்டாள்தனமானதொரு கருத்தாகும். அரசாங்கம் தற்போதுதான் விசாரணைக்குழுவை நியமித்து இச்சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக அதன் அமைச்சர்களே சொல்கிறார்கள். இந்நிலையில் இந்தச் செயலை நாம்தான் தூண்டிவிட்டு செய்வித்தோம் என அரசாங்கத்தால் எப்படிக் கண்டுபிடிக்கமுடியும்?

படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியமைக்கு மூன்றாம் தரப்பினர்மீது தாக்குதல் நடத்தியமையே காரணம் என அமைச்சர் டளஸ் அழகப்பெரும உட்பட அமைச்சர்கள் சிலர் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

சரி, அப்படியானால் அந்த மூன்றாம் தரப்பினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்த கட்டளையிட்டவர் யார்? இதன்போது இங்கு மூன்று அப்பாவி மக்கள் இறந்துள்ளார்கள். உண்மையாக தைரியம் இருந்தால் படையினரைத் தாக்கிய மூன்றாம் தரப்பினர்மீது நான்தான் துப்பாக்கிச்சூட்டை நடத்தச் சொன்னேன் என யாராவது முன்வந்து கூறட்டும் பார்க்கலாம். இது எமது சவால்.

இதைச் செய்தது அரசுதான் என திட்டவட்டமாக எம்மால் கூறமுடியும். மக்களும் அரசின் இதுபோன்ற பொய்யான கருத்துக்களை நம்பமாட்டார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இச்சம்பவத்தின்போது பலியான மாணவர்களுக்காகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் அரசாங்கம் சுத்தமான தண்ணீரை வெலிவேரியவில் ஏற்பாடு செய்யவேண்டும் என்றார். (அ-2)

# ஆஸி. அகதி படகு கடலில் மூழ்கியது; 106 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாகப் பயணித்த மற்றுமொரு படகு நேற்று முன்தினம் கடலில் மூழ்கியுள்ளது. இப் படகிலிருந்து 106 புகலிடக் கோரிக்கையாளர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலிருந்து 120 கிலோ மீற்றர் கடல் மைல் தொலைவிலேயே இப்படகு மூழ்கியதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் படகொன்று மூழ்குவதாக கிடைத்த தகவலையடுத்து கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் சுங்கப் பிரிவினரின் விமானங்களும் அவுஸ்திரேலிய கடற்படையினரின் கப்பலொன்றும் குறித்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

படகில் பயணித்தவர்களில் இருவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகியிருப்பதுடன் படகிலிருந்தவர்களை மீட்பதற்கு 8 உலங்கு வானூர்திகளும் கடற்படையினரின் இரண்டு படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அவுஸ்திரேலிய கரையோரப் பாதுகாப்பு அதிகார சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்தோனேசியாவிலிருந்து பயணித்த படகொன்றே இவ்வாறு மூழ்கியிலிருக்கலாமென ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு இவ்வருடத்தில் மாத்திரம் 13 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் சட்டவிரோதமாக படகுகளில் வந்திருப்பதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# தரம் 5 மாணவர்களுக்கு இப்போதுதான் நிம்மதி

## பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஒருவாரத்துக்கு முன்னர் பிரத்தியேக வகுப்புக்கள், கருத்தரங்கு செயலமர்வுகள் ஆகியவற்றை நிறுத்தி மாணவர்களுக்கு பெரும் நிம்மதியை வழங்கியதாக பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ எம்.என். ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.

இந்தத் தடைகள் மூலம் பெறப்பட்ட பலனை பரீட்சை முடிவுகள் வந்தபின் கண்டு கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் உறங்கியதாக முறைப்பாடு கிடைத்தது.

பரீட்சைக்கு முன்னைய நாளில் இரவு 11 மணிவரை மாணவர்கள் டியூஷன் வகுப்புக்களில் பங்கு பற்றியதாக தகவல் கிடைத்தது. இத்தகைய காரணங்களைக் கருத்திற் கொண்டு 19 ஆம் திகதி நள்ளிரவு முதல் பிரத்தியேக வகுப்புக்கள், கருத்தரங்குகள் நடத்துவதற்கு தடை விதிக்க தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் புதிய ஏற்பாடு தொடர்பாக பிள்ளைகளிடம் இருந்தும் பெற்றோரிடம் இருந்தும் எதிர்ப்புக்கள் வரவில்லை. சகல பரீட்சைகளுக்கும் இந்தத் தீர்மானத்தை அமுலாக்குமாறு பெற்றோர் தெரிவிப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். (அ-2)

# தேர்தல் விதி மீறல்கள் குறித்து 150 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் 150 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் நேற்று முன்தினம் வரையில் 150 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

அரசாங்க வாகனங்களை சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தல், தேர்தல் பிரசார பணிக்கு அரச ஊழியர்களை ஈடுபடுத்தல், சட்டவிரோத கூட்டங்கள், சட்டவிரோத பிரசாரங்கள் மற்றும் சுவரொட்டிகள் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

வன்முறைகள், தாக்குதல்கள், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு எதிராகவே அதிகளவான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-2)

# அரசாங்கம் மக்களை வாய்திறக்க விடுவதில்லை

## சோமவன்ச தெரிவிப்பு

நாட்டில் ஜனநாயகம் இல்லையென ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எவரும் வாய் திறந்து பேசுவதில்லை. இந்த நிலைமை நீடித்தால் மக்கள் பாரிய நெருக் கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடாத ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். வழமையான பழக்கத்தின் அடிப்படையில் எவரும் வாக்களிக்க வேண்டாம்.

பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக் கூடிய தரப்பினருக்கே வாக்களிக்க வேண்டும். மக்கள் தண்ணீர் கேட்டால் அரசாங்கம் அவர்களுக்கு துப்பாக்கித் தோட்டாக்களையே வழங்குகின்றது.

நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தாவிச் சென்றவர்களே இன்று அதிகளவில் ஆளும் கட்சியில் இருக்கின்றனர்.

மாகாண சபைத் தேர்தலில் சரியானவர்களை நியமிக்க மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)



கோண்டாவில் வடக்கு ஸ்ரீவாகீஸ்வரி முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் விநோத உடை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் அனல் பறக்கும் 'கொமன்வெல்த்' அரசியல்



"இலங்கையில் நடைபெறும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் தமிழர்களின் இல்லங்களில் கறுப்புக் கொடி ஏற்றப்படும், ரயில் மறியல் நடத தப்படும்" என்று இந்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி.

அதற்கு அவர் முன் வைத்துள்ள காரணம், "இலங்கை விடுதலை அடைவதற்கு முன்பும், விடுதலை அடைந்த பின்னரும், பண்டித் நேரு, அன்னை இந்திரா அம்மையார், இளந் தலைவர் ராஜீவ் ஆகியோர் காலத்திலும் ஈழத்தமிழர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட எந்த ஒப்பந்தத்தையும் நிறைவேற்றாமல் அவற்றை மீறி, சர்வதேசக் கண்ணோட்டத்தில் முழுவதும் நம்பகத்தன்மையை இழந்து நிற்கிறது இலங்கை.

இந்தியாவுக்கும், தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் எதிராகவே இலங்கை தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நேரத்தில் தமிழர்களின் கோரிக் கையை 'இந்திய பிரதமர் மன்மோகன் சிங் அலட்சியப்படுத்தாமல், இலங்கையில் நடைபெறும் கொமன் வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாது என்று திட்டவட்டமாகவும், வெளிப படையாகவும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் - இந்தியா வருவதற்கு முதல்நாள் இவ்வாறு அறிக்கை விடுத்தார்.

அத்துடன் நிற்கவில்லை. அடுத்த நாள் மீண்டும் ஓர் அறிக்கை விடுத்தார். தன் கட்சியின் "உடன் பிறப்புகளுக்கு" எழுதிய அந்தக் கடிதத்தில் இலங்கை அரசு எவ்வாறு எல்லாம் ஈழத் தமிழர்கள் விடயத்தில் பல்வேறு ஒப்பந்தங்களை மீறியிருக்கிறது என்று பட்டியலிட்டுள்ளார்.

இந்தப் பட்டியலில் 1930 களில் இந்தியாவிலிருந்து கொழும்பிற்கு சென்ற மலையாளிகளையும் சிங்களவர்கள் எதிர்த்தார்கள் என்று சுட்டிக்காட்டி, அதனால் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மலையாளிகள் கொழும்பை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதன்பிறகு ஈழத்தமிழர்களுக்கான ஒப்பந்தங்கள் எப்படி மீறப்பட்டன? ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தனே முன்னின்று கொண்டு வந்த 13ஆவது அரசியல் சட்ட திருத்தம் எப்படிப் போயிற்று என்பது பற்றி விளாவாரியாக ஓர் "ஆய்வு கட்டுரை" போல் எழுதியிருக்கிறார் முன்னாள் முதல்வர் கருணாநிதி.

இந்த இரு அறிக்கைகளும் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் டெல்லியில் இருக்கின்ற காலகட்டத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

"கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது" என்பது ஒருபுறமிருக்க, வரவேற்க வந்திருக்கும் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சரிடம் இந்தியா கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பே இந்த அறிக்கையின் பின்னால் மறைந்து கிடக்கிறது. இது தவிர முதல் முறையாக தி.மு.க. தலைவர் கருணாநிதி, "சிங்களவர்கள்-தமிழர்களுக்கு மட்டுமல்ல, மலையாளிகளுக்கும் எதிரி" என்ற ரீதியில் 1930களில் மலையாளகள் கொழும்பை விட்டு வெளியேறியதை நினைவுபடுத்தி விளக்கியிருக்கிறார்.

இந்திய அரசில் முக்கியப் பதவிகளில் இருக்கும் கேரள மாநிலத்தவரும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இப்படிக் கூறியிருப்பதாக தி.மு.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய பிரதமர் - கொமன் வெல்த் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது தமிழகத்தில் இப்போது இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுப்பது தி.மு.க. மட்டுமே என்பதை முன்னிலைப்படுத்தவே கலைஞர் கருணாநிதி விரும்புகிறார்.

குறிப்பாக இவருக்குப் போட்டியாக இன்னும் வேகமாக இலங்கை தமிழர்கள் விடயத்தில் அறிக்கை விட்டு வந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்த கொமன்வெல்த் மாநாடு விவகாரத்தில் எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுதியதோடு நிறுத்திக் கொண்டிருக்கிறார். அதை முன் வைத்து தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்களோ, போராட்டங்களோ இல்லை. மாணவர்கள் போராட்டமும் இல்லை.

குறிப்பாக சில மாதங்களுக்கு முன்பு சூடுபிடித்திருந்த மாணவர்கள் போராட்டம் இப்போது இல்லை. அதற்காக முழு மூச்சாக நின்ற பழ. நெடுமாறன் போன்றவர்கள் கூட அமைதியாக இருக்கிறார்கள். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மு[illegible] ஏற்கனவே பாகிஸ்தான், நைஜீரியா போன்ற நாடுகள் கொமன்வெல்த் மாநாட்டில் இருந்து "சஸ்பெண்ட்" செய்யப்பட்டுள்ளன என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார். அந்த உதாரணத்தை சாதகமாக்கிக் கொண்டு இலங்கையை கொமன் வெல்த்திலிருந்து "சஸ்பெண்ட்" செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

இது தவிர முன்பு இதற்காக போராடிய பாட்டாளி மக்கள் கட்சி கூட இப்போது அமைதியாக இருக்கிறது. அந்தக் கட்சியினர் மீது போடப்பட்ட தேசிய பாதுகாப்புச் சட்டம், குண்டர் சட்டம் போன்றவற்றை உடைத்து தன் கட்சியினரை வெளியில் கொண்டு வருவதே பெரிய பிரச்சினை என்று நினைத்து "திகைத்து"ப் போய் நிற்கிறது. ஆகவேதான் இந்த தருணத்தை பிரதானமாக எடுத்துக் கொண்டுள்ள கலைஞர் கருணாநிதி, "கொமென்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது" என்று வலியுறுத்தி அடுத்தடுத்து இரு அறிக்கைகள் வெளியிட்டுள்ளார்.

இதற்கு இன்னொரு பின்னணியும் இருக்கிறது. இந்தியாவின் 16ஆவது நாடாளுமன்ற, தேர்தலுக்கான "பாதை" இப்போடு போடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியும் எந்த "பாதையில்" பயணிக்கப் போகிறோம் என்பது பற்றி தீவிர ஆலோசனையில் இருக்கின்றன.

இந்த வகையில் தி.மு.க. தன் முதல் கட்ட ஆய்வை நடத்தி முடித்திருக்கிறது. இந்திய சுதந்திர தினத்திற்கு மறுநாள் ஓகஸ்ட் 16ஆம் திகதியன்று நடைபெற்ற தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் இதற்கான கருத்துக் கேட்பு பணி முடிவு பெற்றுள்ளது.

"கூட்டணி வைக்கும் அதிகாரத்தை தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம் ஒப்படைத்து" தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் தங்கள் ஊர்களுக்கு திரும்பிச் சென்று விட்டார்கள். ஆனால் அ.தி.மு.க. வின் பாதை "தனிப் பாதையா" அல்லது "கூட்டணிப் பாதையா" என்பதை தி.மு.க.வால் இன்னும் உறுதி செய்ய முடியவில்லை.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா, "யாருடனும் கூட்டணி இல்லை" என்று அறிவித்தாலும், அவருடன் கூட்டணி வைப்பதற்காக காங்கிரஸ் கட்சியும், பாரதீய ஜனதா கட்சியும் முண்டியடித்துக் கொண்டு போட்டி போட்டு நிற்பது தி.மு.க. தலைமையின் கண்களுக்கு நன்றாகவே தெரிகிறது.

அதன் எதிரொலிதான் சமீபத்தில் தன் முதல் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் தொடக்கி வைதது்ப் பேசிய பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி அ.தி.மு.க. அரசையும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் பாராட்டியது. இந்த பாராட்டு ஏதோ பா.ஜ.க.வே முன்னின்று தாமாகவே செய்கிறது என்று தி.மு.க. நம்பத் தயாராக இல்லை.

இது எதிர்கால கூட்டணிக்கு திட்டமிடப் பட்ட வியூகம் போலவே கருதுகிறது. அதே நேரத்தில் சமீபத்தில் "தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி" என்று பிரதமர் மன்மோகன்சிங் தமிழகத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் பாராட்டியது, மாநிலத்தில் நடைபெறும் முக்கிய மத்திய அரசின் திட்டங்களை நிறுத்தி வைத்துள்ள நிலையில், மேலும் சுமார் 7800 கோடி ரூபாய்க்கு மோனோ ரயில் திட்டம் அமல் படுத்த தமிழகத்திற்கு இப்போது அனுமதி அளித்து நிதி ஒதுக்கியுள்ளது. அ.தி.மு.க.வுடன நெருங்கிச் செல்ல காங்கிரஸ் முன் எடுத்து வைக்கும் முயற்சி இது என்றே தி.மு.க. நினைக்கிறது. இந்த சூழ்நிலையில்தான் "கொமன வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் ரயில் மறியல் போராட்டம்" என்று அறிவித்தி ருக்கிறது தி.மு.க.

முன்பு காங்கிரஸ்/டன் தி.மு.க. கூட்டணியாக இருந்தது. அப்போது இலங்கை தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு துரோகம் செய்கிறது என்ற போராட்டத்தை வீரியத்துடன் கொண்டு போனது ஆளும் அ.தி.மு.க.தான்.

அதனால்தான் இலங்கை தமிழர் பிரச்சினை பற்றி பேசத் தயங்கியவர்கள் கூட மத்திய அரசை கண்டித்து குரல் கொடுத்தார்கள். இதன் முடிவில் காங்கிரஸ் கூட்டணியை விட்டும், மத்திய அரசை விட்டும் விலக நேர்ந்தது தி.மு.க. ஒருவேளை அ.தி.மு.க. காங்கிரஸ்/டன் நெருங்கிச் செல்ல முயன்றால் "இந்த கொமன்வெல்த் விவகாரம்" கைகொடுக்கட்டும் என்பதும் இந்த "ரயில் மறியல் போராட்ட" அறிவிப்பின் பின்னணிகளில் ஒன்று.

தமிழர்களுக்கு துரோகம் செய்த காங்கிரஸ் கட்சியுடன் கைகோர்க்கிறது என்ற குற்றச்சாட்டை தி.மு.க. தனது நாடாளுமன்ற தேர்தல் பிரசாரமாக்க உதவும் என்ற வியூகமும் இதன் பின்னால் இருக்கிறது.

அதுவும் சில மாதங்களுக்கு முன்பு நடைபயணம் மேற்கொண்ட வைகோவை முதல்வர் ஜெயலலிதா காரிலிருந்து இறங்கிச் சென்று சந்தித்தார். அது அரசியல் பிரளயம் போல் பேசப்பட்டது.

ஆனால் காங்கிரஸை விட்டு தி.மு.க. விலகிய பிறகு அதே அ.தி.மு.க.வின் அமைச்சர் ஒருவர், "காமாலை கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்" என்று வைகோவை கடுமையாக சாடினார்.

இதுவும் தி.மு.க. தலைமைக்கு அ.தி.மு.க.வின் "தேர்தல் பாதை" காங்கிரஸ்/டனும் இருக்குமோ என்ற சந்தேகத்தை விதைத திருக்கிறது. ஆகவேதான் இலங்கை தமிழர் பிரச்சினையில் இப்போது புதிய வடிவமாக "கொமென வெல்த் மாநாட்டு" பரச்சினை சூடுபிடிக்கிறது.

ஆகவே அடுத்தடுத்து தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிடும் அறிக் கைகளில் "இந்திய அரசு இலங் கைக்கு இன்னும் அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்பது முக்கிய நோக்கம்.

அதே நேரத்தில் "இலங்கை தமிழர் பிரச்சினையை" மையப் படுத்தி தங்கள் மீது பழி சுமத்திய தமிழக அரசியல் கட்சிகளுக்கு "செக்" வைக்க வேண்டும் என்பது அந்த அறிக்கையின் "உபரி" நோக்கம்!

(எம். காசிநாதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதீய ஜனதா கட்சியின் தலைவரை எதிர்க்கட்சி தலைவர் ரணில் சந்தித்தார்

(கொழும்பு)

**இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கடந்த திங்கட்கிழமை பாரதீய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் ராஜ்நாத் சிங்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.**

இதன்போது இலங்கை- இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இங்கு ஆராயப்பட்டுள்ளது. அதில் விஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது தான் இலங்கை பிரதமர் என்ற அடிப்படையில் மீனவர் பிரச்சினை குறித்து அவருடன் பேச்சு நடத்தியதை ரணில் விக்ரமசிங்க நினைவுபடுத்தியுள்ளார்.

இந்தியாவின் பொதுத் தேர்தல் மற்றும் இலங்கையின் மாகாண சபைத் தேர்தல் குறித்தும் இங்கு பேசப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்த பிரச்சினை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அயல்நாட்டுடன் சிறந்த உறவை பேண வேண்டும் என கூறிய ராஜ்நாத் சிங் பாரதீய ஜனதா கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையில் உறவை வலுப்படுத்தல் குறித்தும் கருத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தற்போதைய இந்திய விஜயம் உத்தியோகபூர்வமானதல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சில ஊடகங்களை கோடிட்டு இலங்கை ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்திய அதிகாரிகளை சந்திக்க வேண்டும் என்று தொடர்ந்தும் ரணில் விக்ரமசிங்க கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே அவரின் இந்திய பயணத்துக்கு குறித்த அரசாங்கம் இணக்கம் வெளியிட்டதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த பயணத்தின் போது ரணில் விக்ரமசிங்க இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் உட்பட்டவர்களையும் சந்திக்கிறார்.

அத்துடன் அவர் இந்தியாவின் பிரபல சோதிடர் ஒருவரையும் சந்திக்கவுள்ளார். (அ-2)

# 1988–89 காலப்பகுதியில் காணாமற்போன 24 நபர்கள் குறித்த விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

காணாமற்போயுள்ள 24 நபர்கள் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1988 தொடக்கம் 89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போயுள்ள 24 நபர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இக் காலப்பகுதியில் மாத்தளைப் பிரதேசத்தில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் காணாமற் போயுள்ளதாகவும் ஆயினும் சட்டவிதிகளின் படி பொலிஸார் இந்தப் புதைகுழி தொடர்பாக காணாமற்போனோரின் உறவினர்களைத் தெளிவுபடுத்தும் பத்திரிகை அறிவித்தல்களை இதுவரை வெளியிடவில்லை என்றும் சட்டத்தரணி நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, காணாமற்போன உறவினர்களினால் 28 பிரமாணப்பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டன. இதனையடுத்து வழக்கு விசாரணை நவம்பர் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(அ-2)

# உதைபந்து இறுதி ஆட்டத்திற்கு இரு அணிகள் தெரிவாகின

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட இறுதியாட்டத்திற்கு மன்னார் சென்லூசியஸ் அணியும் நாவாந்துறை சென்மேரீஸ் அணியும் தகுதி பெற்றுள்ளன.

டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தி வரும் அணிக்கு 7 பேர்கொண்ட உதைபந்தாட்ட அரை இறுதி போட்டிகள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி நாச்சிக்குடா சென்மேரீஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்மேரீஸ் அணி மோதியது.

இதன்போது 5:2 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென்மேரீஸ் அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் சென்லூசியஸ் அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் அணி மோதியது.

இதில் 4:2 என்ற கோல் கணக்கில் மன்னார் சென்லூசியஸ் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தெரிவாகியது. (அ-9-24)

# சிறுபோகத்தில் 12 ஆயிரம் மெ.தொன் நெல் கொள்வனவு

இம்முறை சிறுபோகத்தில் இதுவரையான காலப்பகுதியில் 12 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் அதிகளவிலான நெல் அம்பாறை மாவட்டத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கே.பி.ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து நான்காயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி, பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சிறுபோகத்தில் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவிக்கின்றது. (அ-2)

# மெட்ராஸ் கபே திரைப்படத்திற்கு மலேசிய தமிழர்கள் எதிர்ப்பு

மெட்ராஸ் கபே படத்தை மலேசியாவில் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக் கடிதம் நேற்று முன்தினம் மலேசிய உட்துறை அமைச்சுக்கும் மலேசியத் திரைப்பட தணிக்கை வாரியத்திற்கும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொலை நகலிலும் அக்கடிதம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி மலேசிய தமிழர்களின் சார்பில் கொடுக்கப்பட்ட இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, மெட்ராஸ் கபே திரைப்படத்தை அமைதிப் பூங்காவாக இருக்கும் மலேசியாவில் திரையிட அனுமதிக் கக் கூடாது.

இப்படம் தமிழீழ விடுதலை போராட்டத்தை கொச்சைப்படுத்தும் விதமாகவும், உடைமைகளையும் உரிமைகளையும் இழந்து வாழும் ஈழத் தமிழர்களைக் களங்கப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. எனவே இப்படத்தை மலேசியாவில் தடை செய்ய வேண்டும் என்று கோருகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெட்ராஸ் கபே படத்திற்கு எதிராக உலகத் தமிழர்களின் போராட்டம் வலுத்துள்ளது. இப்போது மெட்ராஸ் கபே திரைப்படத்தை எதிர்த்து மலேசியா தமிழர்களும் போராட்டத்தில் குதித்துள்ளதுபோன்று இங்கிலாந்து ஈழத் தமிழர்களும் சினி வேர்ல்ட் நிறுவனத்திடம் மெட்ராஸ் கபே படத்தை திரையிடக் கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதனால் தினமும் சினி வேர்ல்ட் நிறுவனத்திற்கு பல அழைப்புகள் குவிந்த வண்ணமுள்ளன. கனடா நாட்டின் டொரோண்டோவில் வாழும் ஈழத் தமிழர்களும் இப் படத்தை திரையிடக்கூடாது என கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

# 22.08.2013 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1639-பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் நாயக்கர்களிடம் இருந்து வாங்கிய நிலத்தில் மதராஸ் நகரத்தை (தற்போதைய சென்னை) அமைத்தார்கள்.
- 1642- லண்டனின் முதலாம் சார்ல்ஸ் ஆங்கில நாடாளுமன்றத்தை "துரோகிகள்" என வர்ணித்தான். ஆங்கில உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1848 - நியூ மெக்சிகோ ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1864 -12 நாடுகள் இணைந்து ஹென்றி டியூனாண்ட் தலைமையில் ஜெனீவாவில் செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தார்கள்.
- 1875 - சக்காலின் மற்றும் கூரில் தீவுகள் தொடர்பாக ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1910-கொரியா-ஜப்பான் இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இரண்டாம் உலகப் போர் முடியும் வரையில் கொரியா ஜப்பானின் ஆட்சியின் கீழ் இருந்தது.
- 1911 - பாரிசில் களவெடுக்கப்பட்ட மோனாலிசா ஓவியம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தில், பிரித்தானியாவும் ஜேர்மனியும் முதன் முதலில் நேரடியாகப் போரில் ஈடுபட்டனர்.
- 1926 - தென்னாபிரிக்கா, ஜோகானஸ்பேர்க்கில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1932 -தொலைக்காட்சி சேவையை முதன் முதலாக பிபிசி சோதித்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மன் படைகள் ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ்பேர்க்கை அடைந்தனர். லெனின்கிராட் மீதான முற்றுகை ஆரம்பமானது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி மீது பிரேசில் போரை அறிவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் ருமேனியாவைக் கைப்பற்றியது.
- 1949 - கனடாவில் 8.1 அளவு நிலநடுக்கம் பதிவாகியது.
- 1962 - பிரெஞ்சு ஜனாதிபதி சார்ல்ஸ் டி கோல் மீதான கொலை முயற்சி தோல்வியடைந்தது.
- 1972 - ரொடீசியா ஒலிம்பிக் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டது.
- 1978 - சண்டினீஸ்டா படைகள் நிக்கராகுவாவின் தேசிய அரண்மனையைக் கைப்பற்றினர்.
- 1989 -நெப்டியூனின் முதலாவது கோள் வளையம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1991 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பிராவ்தா பத்திரிகை மூடப்பட்டது.

**பிறப்பு**

- 1877 - கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, (இ. 1947)

**சிறப்பு நாள்**

- சென்னை தினம்

### ஆனந்த குமாரசுவாமி



சேர் முத்து குமாரசுவாமி, எலிசபெத் பீவி ஆகியோருக்கு ஒரே மகனாக கொழும்பிலே பிறந்தார். லண்டன் பல்கலைக்கழகத்திலே B.Sc தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார். பின்பு அதே பல்கலைக்கழகத்தில் 1905 ஆம் ஆண்டு இல் D.Sc (Geology) பட்டத்தையும் பெற்றார். இலங்கை திரும்பிய ஆனந்த குமாரசுவாமி 1903 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 1906ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இலங்கையின் கனிப்பொருள் ஆய்வுப் பகுதியின் தலைவராக விளங்கினார்.

அந்தக் காலத்தில் விடுதலை (சுதேசிய) உணர்வால் உந்தப்பெற்று சமூக சீர்திருத்தச் சங்கத்தை (1905 ஆம் ஆண்டு) நிறுவினார். அதன் சார்பில் Ceylon National Review என்னும் இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகச் சேவையாற்றினார்.

1907 ஆம் ஆண்டிலிருந்து லண்டனிலும் இந்தியாவிலும் கலை முயற்சிகளில் ஈடுபட்டார். 1911 ஆம் ஆண்டில் அலகாபாத்தில் நடைபெற்ற பொருட்காட்சியின் கலைப்பகுதிக்குப் பொறுப்பு வகித்தார்.

இந்தியக்கலைகளின் இறைமையை உலகிற்கு எடுத்துக் காட்டியசிறந்த தூதுவராகக் கருதப்படுபவர். இறைவனின் ஐந்தொழிலைப் (பஞ்சகிருத்தியத்தைப்) பிரதிபலிக்கும் சிவநடனத்தை விளக்கி 1912இல் 'சித்தாந்த தீபிகையில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை மூலம் இந்தியக் கலைகளின் சிறப்பினை உலகிற்கு அறிமுகப்படுத்திய முன்னோடியாகக் கொள்ளப்படுகிறார். ஆனந்த குமாரசுவாமி தமது எழுபதாவது அகவையில் 1947 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி அமெரிக்காவில் பொஸ்டன் (பாஸ்ட்டன்) நகரில் இயற்கை எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையான கைதிகளை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்ப திட்டம்

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**போதைப் பொருட்களுக்கு அடிமையான கைதிகளை சிறைச் சாலையில் தடுத்து வைக்காது நேரடியாக புனர்வாழ்வு நிலையத் திற்கு அனுப்பி புனர்வாழ்வு வழங்கும் விசேட செயற்றிட்டம் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்ர ர்த்ன பல்லேகம தெரிவித்தார்.**

இதன்படி24கைதிகள்நேற்றுமுன் தினம் பொலனறுவையிலுள்ள புனர்வாழ்வுநிலையத்திற்குஅனுப்பப் டுள்ளனர். இந்த புனர்வாழ்வு மைய த்தில் ஒரே நேரத்தில் 250 கைதிக ளுக்கு புனர்வாழ்வு வழங்க இடவசதி யுள்ளதாககுறிப்பிட்ட அவர் இனிமேல் போதைப் பொருளுக்கு அடிமையா னவர்கள் நேரடியாக புனர்வாழ்வு நிலையத்திற்கே அனுப்பப்படுவர் எனவும் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் சிறைச்சாலை களிலுள்ள கைதிகளில் 65 வீதமா னவர்கள் போதைப் பொருள் பாவ னையுடன் தொடர்புடையவர்களே. இதனால் சிறைச்சாலைகளில் பெரும் இட நெருக்கடி காணப்படுவதோடு கைதிகளை நிர்வகிப்பதிலும் பல சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்நிலையில் போதைப் பொருள் பாவனை தொடர்பாக கைதாகி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படும் கைதிகள் நீதிமன்றங்களினூடாக பொலனறுவை குடாகலுவ புனர் வாழ்வு முகாமுக்கு அனுப்பப்படவுள் ளனர். இவர்களுக்கு 6 மாத கால புனர்வாழ்வு வழங்கப்பட்ட பின்னர் இவர்கள் விடுவிக்கப்படவுள்ளதாக வும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

இதனால் எதிர்காலத்தில் சிறைச் சாலையில் காணப்படும் இடநெரி சல் பெருமளவு குறைவடையும் என வும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவகாலத்தில் தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.இதன்படி இன்று வியாழக்கிழமை திருமதி கிருஷ்ணப்பிரியா ஆனந்தராஜா, திருமதி அமுதா ரகுநந்தன் ஆகியோரின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.இந்நிகழ்வின் அணிசெய் கலைஞர்களாக வயலின் எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் எம்.சிதம்பரநாதன் , கடம் ஆர்.ரகுநந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி மஹோற்சவ த்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமய சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவ காலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வுகளாக கு.பாலசண்முகன் வழங்கும் உமையாள் பயந்த இலஞ்சியம் எனும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.தொடர்ந்து இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சண்டிலிப்பாய் சீரணி நாகம்பாள் அறநெறிப்பாடசாலை, புத்தூர் ஈஸ்வரன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வும் இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரைகளும் கலை நிகழ்வுகளும் மாணவர் சொற்பொழிவுகளும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும்.இதன்படி இன்று வியாழக்கிழமை புலவர் முத்துக்குமாரு பாலசுப்பிரமணியும் வழங்கும் சமயமும் நாதமும் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கம நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று வியாழக்கிழமை ஸ்ரீமதி மதுமிதா பிரதீப சர்மா வழங்கும் பாட்டு கச்சேரி இடம்பெறவுள்ளது.

# சிறையிலிருக்கும் நளினியின் அறையை பார்வையிட முடிவு

(சென்னை)

வேலூர் சிறைச்சாலையில் கைய டக் தொலைபேசி பறிமுதல் செய் யப்பட்ட வழக்கில் வேலூர் நீதிமன் றத்தில் ஆயுள் தண்டனைக் கைதி யாக இருக்கும் நளினி நேற்று முன் தினம் மீண்டும் நீதிமன்றில் ஆஜ ரானார்.

இவ்வழக்கில் நேரடி சாட்சிகள் 10 பேர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த னர். நீதிபதி மும்மூர்த்தி முன்னி லையில் இந்த வழக்கு விசாரணை க்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சிறைக் கண்காணிப்பாளர் ராஜலட் சுமி முதலில் சாட்சியம் அளித்தார்.

சிறை அறையில் பறிமுதல் செய் ததாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் பட்ட கையடக்க தொலைபேசியை அவர் அடையாளம் காட்டினார். அடுத்து சம்பவத்தின் போது உதவி சிறை அதிகாரியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற லட்சுமி சாட்சியம் அளி த்தார்.

சம்பவம் தொடர்பான சான்று பொருட்களான கையடக்கத் தொலை பேசி, பிளாஸ்ரிக் வாளி, சணலால் ஆன கட்டை பை ஆகியவற்றை அடையாளம் காட்டினார்.

3 ஆவது சாட்சியாக முதல் நிலை தலைமைக் காவலர் சுபஜோதி சாட்சியம் அளித்தார். அதைத் தொடர்ந்து நளினி சார்பாக ஆஜ ரான வக்கீல் புகழேந்தி இரு மனுக் களை மஜிஸ்திரேட்டிடம் தாக்கல் செய்தார்.

நீதிமன்றத்தால் சம்மன் அனுப் பப்பட்ட 3 சாட்சிகளிடம் மட்டுமே விசாரணை நடத்தப்பட வேண்டும். பிறசாட்சிகள் சம்மன் இன்றி ஆஜ ராகியுள்ளனர். அதனால் அவர் களை அன்றைய தினம் விசாரிக்க முடியாது என முதல் மனுவில் கோரப் பட்டிருந்தது.

இதனையடுத்து நாளை மாஜிஸ் திரேட் அரசுத் தரப்பு வக்கீல் , எதிர்த்த ரப்பு வக்கீல்கள் ஆகியோர் வேலூர் பெண்கள் மத்திய சிறைக்கு சென்று நளினி அறையை பார்வையிட லாம் என்று நீதிபதி மும்மூர்த்தி அறி வித்தார்.

அதைத் தொடர்ந்து அடுத்த விசாரணை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும் என நீதிபதி மும்மூர்த்தி அறிவித்தார். (அ-2)

# நல்லூரான் திருவடிக்கு பதினொராம் திருவிழா



# வேலவனை நாடு நெஞ்சே!

மயிலேறும் பாலகனை
மாலவனின் மருகனை
கயிலாயத் தலைவனவன் திருமகனை
தேவர்களின் துயரமதைத் தீர்த்தவனை
சூரன்தனை வதைத்தவனை
ஜயமதுவே தருகின்ற வேலவனை நாடுநெஞ்சே!

ப.மகேந்திரதாசன்,
நாயன்மார்கட்டு.

# வரம் தந்திட வீதியுலா வா ஆறுமுகா

சூரனை வதம் செய்ய அவதரித்த சுப்பிரமணியனே
வெள்ளிப் பீடத்தில் நீ அமர்ந்து
காட்சி தர வருவாய் சரவணபவனே
பக்தர்களின் வினைகளைப் போக்கிட
நல்லூர் வீதியிலே பவனிவந்து
அருள் அள்ளி வழங்கிட வா முருகா

ஸ்ரீ-பவானி
திருநெல்வேலி

# சீர்மியம் சேர் வழியதனை காட்டிடையா

விந்தை வியனுலகில் வீணர் பலரிருந்து
வேடிக்கை காட்டுவதை ஓட்டிடையா
கந்தை நிலையெனினும் கந்தா நினைமறந்து
கடையராய் வாழ்பவரை வாட்டிடையா
முந்தை வழியெங்கள் மூலம் பிறளாமல்
முழுமையுறு வாழ்வதனை நாட்டிடையா
சிந்தை தனிலுந்தன் சிறப்பை சேர்த்திருந்தும்
சீர்மியம் சேர் வழியதனை காட்டிடையா!

தென்புலோலியூர்
பரா.றமேஸ்

# நல்லூரான் காட்சியது களிப்பு

தேன் தமிழ் தந்த சுந்தரச் சண்முகா!
வான் மகளும் வன மகளும் வலமிடமாகவே– தோன்றுவாய்
தோகை மயில் அமர்ந்து வீதி வலம் வந்து கண் நிறைவாய்
ஓகை மிகும் காட்சியது களிப்பு

கலைப்பரிதி சி.சிவநேசன்
அல்வாயூர்

# நல்லூர் கந்தன் அநுபூதி

முருகா! வெனவென் றொருகா லுரைக்கின்
பெருமா நலனும் பெருகும் தனமும்
தருவா னவனே "தரு" வா னவனே
வரமே கரமே வரும்நல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

அமெரிக்கன் வோட்டர்
E.S.P நாகரத்தினம் அன் கோ
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 3096




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரமின்றி இருளில் மூழ்கும் கிராமங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், காந்திக்கிராமம், கோணாவில், யூனியன் குளம் ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் பல தடவைகள் உரியவர்களிடம் முறையிட்டும் அதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

போர் காரணமாக இடம் பெயர்ந்து பின் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இக் கிராமங்களில் 2ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமை பெரும் குறைபாடாக காணப்படுகின்றது. இக்கிராமங்களின் குடும்ப அங்கத்தவர்கள் விவசாய த்தையே தமது வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் இங்கு மின்சாரம் இன்மையால் மண்ணெண்ணெய் மூலமே விவசாய தொழிலுக்கான இயந்திரங்களை இயக்க வேண்டியுள்ளது. தற்போது தமது விவசாயத்தை நல்ல முறையில் மேற்கொண்டு வரும் இவர்கள் இந்நிலையில் மின்சாரம் வழங்கப்படுமாயின் மேலும் முயற்சி செய்து திறமையாக தமது வாழ்வாதார தொழிலை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கின்றனர். இக்கிராமங்களின் பாடசாலை மாணவர்கள் மின்சாரம் இன்றி மிகவும் பாதிப்புற்று வருகின்றனர். மேலும் மின்சாரத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படும் அனைத்து செயற்பாடுகளும் இங்கு ஸ்தம்பித நிலையில் காணப்படுகிறது. நகரில் அண்டிய பகுதிகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. மின்சாரம் வழங்குவதில் தமது கிராமங்கள் மட்டும் புறக்கணிக்கப் படுவது ஏன்? என கிராம மக்கள் கவலையுடன் கேள்வி எழுப்பியுள் ளதோடு கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையிலும் தமக்கு மட்டும் மின்சாரம் மற்றும் வாழ்வாதார உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை என ஆதங்கம் வெளியிட்டுள்ளனர். இது விடயம் தொடர்பாக உரியவர்கள் விரைவில் நடவடிக்கை எடுத்து உதவவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (ம)



## குர்நாற்றம் வீசுவதால் மூக்கை பொத்தும் மக்கள்

(குருமன்காடு)

வவுனியா நகரப்பகுதியில் உள்ள கோழிக்கடை வீதியில் கழிவுகள் வீசப்படுவதால் இப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். பலரும் பயணிக்கும் இவ்வீதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் இவ் வீதி பெரும் சுகாதார சீர்கேடாக காணப்படுகி ன்றது. அத்துடன் இவ் வீதியில் காணப்படும் கழிவுகளை விலங்குகள் அருகில் உள்ள குடியிருப்பு குளத்திற்குள் கொண்டு சென்று போடுவதால் குளத்து நீர் மாசடைகின்றது. இவ்வீதியில் உள்ள கழிவுகளை அகற்றுவதற்கு எவரும் முன்வரவில்லை. எனவே இக்கழிவுகளை அகற்ற உரியவர்கள் முன்வர வேண்டுமென்பதே பயணிகளினதும் அப் பகுதி மக்களினதும் கோரிக்கையாகும். (ம- 250)

## இயந்திரமயமாக்கப்பட்ட வேலைகளால் தொழிலாளர்கள் பாதிப்பு

(பூநகரி)

பூநகரி பகுதியில் வாய்க்கால் புனரமைப்பு, குளங்கள் நிர்மாணித்தல், குளங்களைஆழமாக்கல்போன்ற விவசாய அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இவை அனைத்தும் இயந்திரமாக்கப்ப ட்டுள்ளமையால் கிராம மக்கள் வேலைவாய்ப்பை பெற முடியாத நிலையிலுள்ளனர். விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத் தப்படும் பல விவசாய வேலைத் திட்டங்கள் கடந்த காலங்களில் பொது அமைப்புகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டன. ஆனால் தற்போது முன்னர் போன்று பொது அமைப்புகளுக்கு வேலை திட்டங்கள் வழங்கப்படாமையால் இக்கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது சகல வேலைகளும் வெளிமாவட்ட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படுவதோடு அவ்வேலைகளில் பாரிய இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதனால் அவை சீரான வேலைகளாகவும் இருப்பதில்லை. மேலும் இங்குள்ள கூலி தொழிலாளர்கள் வேலை வாய்ப்பின்றி அல்லற்படவேண்டிய நிலையும் உள்ளதாக பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள் ளன.எனவே உரிய அதிகாரிகள் இவ்வேலைத் திட்டங்களை கிராம மட்ட பொது அமைப்புக்களுக்கு வழங்குவதன் மூலம் இப்பகுதி கூலி தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ள ஆவன செய்யும்படி சுட்டிக் காட்டப்பட்டு ள்ளது. (ம-84)

## பணம் வாங்கி ஏமாற்றிய நபருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)



வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்புவதாக கூறி பணமோசடி செய்தவரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வெள் ளாம் முள்ளிவாய்க்கால் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் 4இலட்சத்து 72ஆயிரம் ரூபா பணத்தை வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்பிற்காக அனுப்புவதாக கூறி ஏமாற்றி பெற் றுள்ளார். பணத்தை கொடுத்த முள்ளியவளையைச் சேர்ந்தவர் முள்ளியவளை பொலிசாருக்கு முறைப் பாடு செய்ததைத் தொடர்ந்து குறித்த நபரை கைது செய்த பொலிசார் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேச ராஜா மேற்குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். சந்தேகநபர் தான் குறித்த பணத்தை முறைப்பாட்டாளருக்கு தவணை முறையில் செலுத்துவதாக மன்றில் உறுதியளித்துள்ளார். (ஆ-ம)





பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாட்டு வண்டிச் சவாரி போட்டி அண்மையில் இடம் பெற்ற போது...

(படங்கள் :- பூநகரி செய்தியாளர்)

## கும்பாபிஷேக நிகழ்வு

(பூநகரி)

பூநகரி கௌதாரிமுனை கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக நிக்ழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். இன்று வியாழக்கிழமை நண்பகல் 12மணி முதல் பிற்பகல் 5மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-84)




## வீதியை புனரமைக்குக



(கிளிநொச்சி)

கிளிநொச்சி சித்தி விநாயகர் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாது பயணிக்க முடியாத நிலையில் உள்ளது. இவ்வீதியை 300 குடும்பங்கள் வரையில் பயன்படுத்தி வருகின்ற போதும் வீதி புனரமைக்கப்படாமையால் பல அசௌகரியங்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி உள்ளது. இன்று வரை கவனிக்ககப்படாதிருக்கும் இவ்வீதியை கவனத்தில் கொண்டு புனரமைப்பு செய்து போக்குவரத்திற்கு உதவும்படி பயணிகளால் கோரிக்கைவிடப்படுகிறது. (ம-254)

## நிறுத்தல் அளவை கருவிகள் முத்திரையிடல்

(புளியம் பொக்கணை)

கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஏனைய நிறுவனங்களில் உள்ள நிறுத்தல் அளவைக் கருவிகள் மற்றும் நிறுத்தல் உபகரணங்கள் முத்திரையிடல் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக் கிழமையும் கண்டா வளை பிரதேச செயலகத்தில் நடை பெறவுள்ளது. (ம-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தில் முஷாரப்பின் குற்றச்சாட்டுக்கள் பதிவு

**பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மீதான குற்றச்சாட்டுக்கள் பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.**

பெனாசீர் பூட்டோ கொலை வழக்கு ராவல்பிண்டி நகரில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் பர்வேஸ் முஷாரப் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொலை, கொலைகுச் சதி செய்தல், கொலை புரிய வசதி செய்து தருதல் உள்ளிட்ட குற்றங்கள் அவர் மீது சாட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில், பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்புடன் முஷாரப் நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்டார். அவர் நீதிபதி ஹபிப் உர் ரஹ்மான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது பெனாசீர் கொலை வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டன. இவ்வழக்கில் முஷாரபின் குற்றத்தை நீதிமன்றம் உறுதி செய்தால் அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளது.



(அ-2)

## ஞானதேசிகன் விதண்டாவாதம் கதைக்கக்கூடாது - கலைஞர்



இலங்கையை எதிரி நாடாகக் கருதினால் தமிழர்களின் பிரச்சினை குறித்து யாரிடம் பேசுவது என்று கேள்வி எழுப்பிய தமிழ்நாடு காங்கிரஸ் குழுத்தலைவர் பி.எஸ். ஞானதேசிகனுக்கு, தி.மு.க. தலைவர் முத்துவேல் கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையை எதிரி நாடாகக் கருதினால், தமிழர்களின் பிரச்சினை குறித்து யாரிடம் பேசுவது என்பதை தமிழக அரசியல் கட்சிகள் கூற வேண்டும் என ஞானதேசிகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ராஜீவ்காந்தியை தாக்கிய இலங்கை இராணுவ வீரர், அதற்காக தான் வருத்தப்படவில்லை என சமீபத்தில் பேட்டியளித்துள்ளார். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், தாக்குவதும் தொடர்ந்து நடந்து வருகிறது. பிரதமரே இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை இலங்கை அமைச்சரிடம் கலந்துரையாடியுள்ளார்.

அங்கு தொடர்ந்து தமிழர்கள் தாக்கப்படுவது உள்நாட்டு அரசியல் நிகழ்வா? தொப்புள் கொடி சொந்தங்களின் துயரத்தைக் கண்டும் காணாது கபட நாடகம் ஆட முடியுமா?

ஞானதேசிகனைப் போன்றவர்கள் இப்படி விதண்டாவாதம் பேசுவதால்தான் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியாவில் இருந்து கொண்டே கச்சதீவை ஒப்படைக்க முடியாது என சூளுரைத்துள்ளார்.

அதனால்தான் அங்கும் இங்கும் தமிழர்களிடையே உள்ள ஒற்றுமையின்மையை சிங்களவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டு பயன்படுத்துகிறார்கள் என எழுதியிருந்தேன்.

(அ-2)

## ஒபாமை சந்திக்கிறார் பிரதமர் மன்மோகன்சிங்

(வோஷிங்டன்)

பிரதமர் மன்மோகன்சிங் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக வெள்ளை மாளிகை தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் 27 ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்கா பயணமாகிறார். 2 நாட்டு தலைவர்களும் பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் தொடர்பாக பேச்சு நடத்தவுள்ளனர்.

வோஷிங்டனில் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனுடன் பேச்சு நடத்தியதாக ஆங்கில பத்தி ரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இரு நாட்டு ஆலோசகர்களும் பொருளாதாரம் மற்றும் வர்த்தக உறவுகள், பாதுகாப்பு, ஒத்துழைப்பு முன்னேற்றம், கால நிலை மாற்றம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறப்படுகிறது.

கூட்டத் தில் காஷ்மீர் எல்லைப பகுதியில் நிகழும் வன்முறை குறித்தும் இரு நாட்டு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

(அ-2)

## 338 இந்தியர்களை விடுவிக்கிறது பாக்.

பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 338 இந்திய கைதிகளை நாளை வெள்ளிக்கிழமை விடுதலை செய்ய பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

வெளியுறவுத் துறை அமைச்சர் பாகிஸ்தான் செல்லவிருக்கும் நிலையில், நல்லுறவை வளர்க்கும் வகையில், பாகிஸ்தான் சிறைகளிலுள்ள இந்திய கைதிகளை விடுவிக்கவிருப்பதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இதில் பெரும்பாலானவர்கள் மீனவர்கள் ஆவர். மேலும், வாகா எல்லையைத் தாண்டிச் சென்ற பெண்களும் குழந்தைகளும் இவர்களுடன் அன்றையதினம் விடுதலை செய்யப்படவுள்ளனர்.(அ-2)



**இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் துணை ஜனாதிபதி கரீம் கலீலி, டில்லியில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.**

## ஜப்பான் அணுஉலையிலிருந்து கதிர்வீச்சு கழிவு நீர் கசிவு



(டோக்கியோ)

ஜப்பான் அணு உலையிலிருந்து 300 டொன் கதிர்வீச்சு கழிவு நீர் கசிந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பயங்கர நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சுனாமியால் புகுஷிமா பகுதியில் இருந்த டோக்கியோ எலக்ட்ரிக் பவர் நிறுவனத்துக்கு சொந்தமான டெய்சி அணு மின் நிலையத்துக்கு கடும் சேதம் ஏற்பட்டது.

அங்கு அவ்வப்போது கதிர்வீச்சுடன் கூடிய கழிவுநீர் வெளியேறி அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது. கழிவு நீரைத் தேக்கி வைக்க நூற்றுக்கணக்கான தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் அந்த தொட்டிகளில் ஏதோ ஒன்றிலிருந்து கதிர்வீச்சு கழிவுநீர் கசிந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டோக்கியோ எலக்ட்ரிக் பவர் நிறுவன செய்தித் தொடர்பாளர் மசாயுகி ஒனோ இது குறித்து கூறுகையில்,

எந்த தொட்டியிலிருந்து கழிவு நீர் கசிந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கசிந்து வந்த நீரை மீண்டும் தொட்டிகளுக்கு அனுப்பும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றார். (அ-2)

## சீன எல்லையில் இந்தியாவின் போர் விமானம் நிறுத்தம்

(புதுடில்லி)

உலகிலேயே உயரமான ஓடுதளத்தில், சீன எல்லையில் நேற்று முன்தினம் இந்தியாவின் போர் விமானம் சுப்பர் ஹெர் குலிஸ் களம் இறக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையே நீண்ட காலமாக தீர்க்கப்படாத எல்லைப்பிரச்சினை இருந்து வருகிறது. லடாக் பகுதியில் சீன இராணுவ வீரர்கள் அத்துமீறி நுழைவதும், அவர்களை இந்திய இராணுவம் திருப்பி அனுப்புவதும் சமீப காலத்தில் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், அந்த பகுதியில் உண்மையான எல்லைக்கட்டுப்பாட்டு கோடு அருகில் தவுலத் பெக் ஓல்டி விமான ஓடுதளத்தில், இந்திய விமானப்படை சுப்பர் ஹெர்குலிஸ் போக்குவரத்து விமானத்தை நேற்று முன்தினம் காலை 6.54 மணிக்கு களம் இறக்கியது.

**உலகிலேயே உயரமானது**

இந்த விமான ஓடுதளம் கடல் மட்டத்தில் இருந்து 16 ஆயிரத்து 614 அடி உயரத்தில் அமைந்துள்ளது. அந்த வகையில் உலகிலேயே உயரமான விமான ஓடுதளம் இதுதான். இங்கு சுப்பர் ஹெர்குலிஸ் போக்குவரத்து விமானத்தை விமானப்படை களம் இறக்கி இருப்பது, வீரர்களைப் பெரிய அளவில் ஏற்றிச் செல்வதற்கும், தளபாடங்களைக் கொண்டு செல்வதற்கும், அதிநவீன தகவல் தொடர்பு வசதிகளுக்கும் மிகவும் உதவியாக இருக்கும்.

அது மட்டுமல்ல, இந்த விமானத்தை உண்மையான எல்லைக்கட்டுப்பாட்டு கோடு அருகில் நிறுத்தி இருப்பது இந்திய துருப்புகளுக்கு மிகுந்த மன உறுதியையும் நம்பிக்கையையும் அளிப்பதாகவும் அமைந்துள்ளது.

**பெருமிதம்**

உலகின் மிக உயரமான விமான ஓடுதளத்தில் சுப்பர் ஹெர்குலிஸ் விமானத்தை நிறுத்தி இருப்பது உலக சாதனைக்கு உரியது என விமானப்படை பெருமிதம் தெரிவித்துள்ளது. (அ-2)

## 17 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றியது ஈராக்

(பக்தாத்)

ஈராக்கில் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த 17 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் ஒரே நாளில் கடந்த 19 ஆம் திகதி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதில் 2 பெண்களும் அடங்குவர்.

உலகம் முழுவதும் மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என மனித உரிமை ஆர்வலர்கள் போராட்டம் நடத்தி வருகின்ற நாட்களில் ஈராக்கில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. பல நாடுகளில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் ஈராக், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தொடர்ந்து மரண தண்டனை நடைமுறையிலுள்ளது. இதை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ஈராக்கில் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டுள்ளமை ஈராக் மக்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டமை என பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டிருந்த 2 பெண்கள் உட்பட 17 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே ஒரு சட்டம் தான் உண்டு. சந்தர்ப்பத்தை உணர்ந்து கடமை உணர்வுடன் வாழ்வதே உண்மையான சட்டம்
– சத்ய சாயிபாபா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லூர் மஹோற்சவ காலத்தில் தலைக்கவசத்திற்கு விலக்கு கொடுங்கள்

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலத்தில், ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களின் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்கு என்பது தெரிந்த விடயம்.

முன்பெல்லாம் நல்லூர்க் கந்தனின் திருவிழா என்றால் விசேட பஸ் சேவைகள் நடத்தப்படுவது வழக்கம்.

பெரும்பாலானவர்கள் பஸ்ஸில் பயணித்தே ஆலயத்திற்கு வருகின்ற வழமை இருந்தது. ஆனால், இப்போது நிலைமை அதுவல்ல.

பஸ் பயணத்திற்குப் பதிலாக மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்துவோர் ஏராளம் என்றாகி விட்டது.

இதன் காரணமாக நல்லூர்க் கந்தனின் ஆலயச் சூழலில், வாகனத்தரிப்பிடத்திற்கான இடங்கள் கணிசமாகத் தேவைப்படுகின்றது.

விசேட திருவிழாக்களில், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் நிறுத்தவேண்டிய தேவை உள்ளது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில், ஒரு மோட்டார் சைக்கிளுக்கு தலா இருவர் என்ற அடிப்படையில் ஆலயத்திற்கு வருகின்ற போது, இரண்டு தலைக்கவசங்களும் (ஹெல்மெட்) கூடவே வருகின்றன.

அந் நிலையில் ஹெல்மெட்டின் பாதுகாப்பு மிகவும் கடினமாகி விடுகின்றது.

துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு இடங்களில், மூவாயிரம் நாலாயிரம் ஹெல்மெட்டுக்களை பாதுகாப்பதென்பது கடினமான காரியம் என்பதுடன் அந்த ஹெல்மெட்டுக்களை மீளப்பெறுவதற்காக எடுக்கும் காலதாமதமானது குறித்த இடங்களில் மிகப்பெரிய நெரிசலை ஏற்படுத்தி விடுகின்றது.

தலைக்கவசம் இல்லையாயின் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு இடங்களில் இருந்து மோட்டார் சைக்கிள்களை எடுத்துச் செல்வது விரைவுபடுத்தப்படும்.

இதன் மூலமாக நெரிசல்களைக் குறைக்க முடியும்.

நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அடியார்கள் வருகின்ற நேரங்கள் வேறுபட்டதாக இருக்கும் அதேவேளை, வீடுசெல்வது என்பது திருவிழா நிறைவு பெற்ற நேரமாக இருப்பதால் வீடு செல்கின்ற போது ஏற்படுகின்ற நெரிசல் அதிகமானதே.

எனவே நல்லூர்க் கந்தப்பெருமானின் திருவிழாவிற்கு மோட்டார் சைக்கிள்களில் வருகின்ற அடியவர்களுக்கு தலைக்கவசம் அணிவதில் இருந்து விலக்குகொடுப்பது பொருத்தமானதாக இருக்கும்.

தலைக்கவசம் என்பது முக்கியமான தென்பதில் இருவேறு கருத்துக் இடமில்லையாயினும், இலட்சக்கணக்கான பக்தர்கள் நல்லூரில் கூடுகின்ற போது ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்க்கும் பொருட்டு ஆலயத்திற்கு வருகின்றவர்கள் கவசம் அணியாமல் பயணிப்பதற்கு அனுமதி கொடுப்பது சூழ்நிலைக்கேற்ப எடுக்கப்படும் சிறந்த தீர்மானமாக இருக்கும்.

அதேநேரம் ஆலயத்திற்கு செல்லவேண்டிய ஆசாரத்துடன் பயணிப்பவர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பத்தை வழங்கும் போது, ஆலயத் தெய்வீக சூழலுக்கும் அது சுமுகமானதாக அமையும். எனவே இது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர முதல்வர், யாழ்ப்பாண பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு நிலைமையை எடுத்துக் கூறி நல்லூர் மஹோற்சவ காலத்தில் தலைக்கவசம் அணிவதில் இருந்து விலக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வது பயன்தரும்.

## ஜனநாயக கட்சி வேட்பாளர் மீது இனந்தெரியாதோர் தாக்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை முதன்மை வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்குள் இனந்தெரியாத நபர்கள் சிலர் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவின் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் சேனாதிராஜா கிருஸ்ணகுமாரிற்கே இவ்வாறு தாக் குதல் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

மானிப்பாய் பகுதியில் அமைந் துள்ள இவரது வீட்டிற்கு கடந்த திங்கட்கிழமை இரவு சென்ற சிலர் அவர் மீது தாக்குதலை மேற் கொண்டுவிட்டு தப்பிச் சென்றதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலின்போது அவர் வெட்டுக் காயங்களுக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த கார்த் திகேசு சிவகுமார் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமைமுல்லைத் தீவு மாவட்ட நீதவான் கணேசராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ்.-கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், முல்லைத் தீவு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் முள்ளியவளைப் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினரும்ஆவார். அத்துடன் வன்னியின் பல் வேறு பாடசாலைகளிலும் இவர் தொண்டராசிரியராகப் பணியாற்றியுள்ளார். (அ)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடந்த மாதம் 31ஆம் திகதி இரவு அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 34 இந்திய மீனவர்களை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி பருத்தித்துறைக் கடற்பரப்பில் சம்பவதினம் இரவு இந்திய 5 டோறாப் படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவேளை இந்த மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப் பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மீனவர்களுக்கு ஆதரவாக இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜராகினர்.

இவ்வழக்கை விசாரணை செய்த நீதவான் ஶ்ரீநிதி நந்தசேகரன் யாழ். மேல் நீதிமன்றத்தில் இவ்வழக்கு தொடர்பாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-24)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

21.08.2013க்கான வினாவும் விடையும்:-

**வினா:-** ஒவ்வொரு இந்துவும் உணவு உண்ண முன் என்ன செய்யவேண்டும்?

**விடை:** பிரார்த்தனை செய்ய வேண்டும். மனம் அமைதியாக இருந்தால் உணவு அமிர்தமாக மாறும். அதற்காகவே பிரார்த்தனை செய்யவேண்டும்.

22.08.2013: **வினா:-** வேதாந்த சித்தாந்தம் கற்றதனாலென்ன வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே... என்று கூறியவர் யார்?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்**

**இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர்.**

## சத்திய தரிசனம்



சோதனைகளை வரவேற்கவேண்டும். உங்களுடைய முன்னேற்றத்தை அளவிடுவதற்காகவே சோதனைகள் சுமத்தப்படுகின்றன. எனவே துன்பத்தின்முன் அஞ்சி நிற்காதீர்கள். அவதாரம் என்றால் என்ன? கருணையும் அன்பும் கொண்டு பகவான் மனிதவடிவில் அவர்களது நிலைக்கு இறங்கி ஜீவப்பிரக்ஞையுடன் தெய்வப் பிரக்ஞையும் கொண்டு இயங்குவதே அவதாரம் ஆகும்.

நீ ஆன்மீக சாதனைப் பயிற்சி வழியை மிகுந்த உற் சாகத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அரைகுறையாகத் தயங்கிச் செல்லும் நடைகள் பயன்தராது. அது தண்ணீரின் பெருக்கால் சேறு நிறைந்த இடத்தைக் கழுவுவது போன்றது. தண்ணீர் பாய்ச்சாது மெதுவாக நடைபெற்றால் சேற்றைக் கழுவ இயலாது. அதன்முன் இருக்கும் அனைத்தும் தூரத் தள்ளி அங்கிருந்து சேறு முழுமையாக விலக்கப்பட்டு இடம் சுத்தமாக்கப்படும் அளவுக்கு தண்ணீர் வேகமாக முழுமையாக வெளிவரவேண்டும்.

நீ பண்டிதனாகவோ, துறவியாகவோ ஜெப தியானத்தில் தேர்ச்சி பெற்ற சந்நியாசியாகவோ இருக்கவேண்டும் என்று நான் கேட்கவில்லை. உனது இதயம் பிரேமை நிறைந்து இருக்கிறதா? என்பது ஒன்றையே நான் ஆராய்கிறேன்.

## சந்தேகத்துக்கிடமாக நடமாடியவர் கைது

(கரவெட்டி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் இரவு வேளை சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறி அச்சுவேலி பத்தைமேனியைச் சேர்ந்த நபர் ஒருவரை நேற்று முன்தினம் இரவு பொலிஸார் கைது செய்தனர்.

இவரை நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது குறித்த நபரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-24)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## பெண்கள் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யலாமா?

பெண்கள் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதைத் தடைசெய்து ஆசாரியர்கள் விதிவகுத்துள்ளனர். ஆண்களும் சரியான விதிமுறைப்படி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதில்லை என்றும் நாம் காண்கின்றோம்.

பிராணாமோ அஷ்டாங்க ஈரித என்பது சாஷ்டாங்க நமஸ்காரத்தை குறித்து கூறப்படுவது. மார்பு,நெற்றி, வாக்கு, மனசு, தொழுகை, கண், கால்மூட்டு என்பவைகளே சாஷ்டாங்க நமஸ்காரத்தில் உபயோகிக்கும் எட்டு உறுப்புக்கள்.

நமஸ்கரித்து கிடக்கும் போது இரண்டு கால்களின் பெருவிரல்கள், இரண்டு கால்முட்டுக்கள், மார்பு, நெற்றி என்ற நான்கு பாகங்கள் மட்டுமே தரையில் தொடலாம் என்றும் போதித்துள்ளனர். கைகள் தரையில் தொடாமல் இவ்வாறு கிடக்க முடியாதென்பதால் கவிழ்ந்து கைகளை எடுத்து தலைக்குமேல் நீட்டி வணங்குவதுதான் சாஷ்டாங்க நமஸ்காரம்.

தரையில் தொட்டிருக்கும் நான்கு பாகங்களும் தொழும் கையும் சேர்ந்து ஐந்தங்கமாகும். எஞ்சிய மூன்றும் வாக்கு, கண், மனது என்பவையாகும் அதில் வாக்கினால் மந்திரம் சொல்லி கண்களால் தேவனைப் பார்த்து மனதால் தியானிக்கவேண்டும். இவ்வாறு கவிழ்ந்து படுத்து செய்வதனால் மார்பில் அழுத்தி அசௌகரியம் உண்டாவதால் பெண்கள் அனுபவிக்கும் இன்னல்களைத் தவிர்க்கவே பெண்கள் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யலாகாது என்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்து பிறீமியர் லீக் மன்செஸ்டர் சிட்டி வாகை

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் மன்செஸ்டர் சிட்டி அணி வெற்றிபெற்றுள்ளது. நியூகாசில் யுனைட்டட் அணிக்கெதிரான இப்போட்டியில் அவ்வணி 4-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டியின் ஆரம்பத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திய மன்செஸ்டர் சிட்டி அணி, 6ஆவது நிமிடத்திலேயே முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது. டேவிட் சில்வா அந்தக் கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

அதன் பின்னர் போட்டியின் 22ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிட்டியின் சேர்கியோ அகுவரே கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க, மன்செஸ்டர் சிட்டி அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலையைப் பெற்றது.

போட்டியின் 40ஆவது நிமிடத்தில் நியூகாசில் யுனைட்டட் அணியின் ஸ்டீவன் ரெய்லர் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட, நியூகாசில் யுனைட்டட் அணி 10 பேர் கொண்ட அணியாக மாற்றப்பட்டது.

இரண்டாவது பாதியில், போட்டியின் 50ஆவது நிமிடத்தில் யாயா ருவரே, 74ஆவது நிமிடத்தில் சமிர் நஸ்ரி ஆகியோரும் தலா ஒரு கோலைப் பெற்றுக் கொடுக்க, மன்செஸ்டர் சிட்டி அணி 4-0 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றது.




## பெயரை மாற்றிய ஷரபோவா

ரஷ்ய டெனிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவா தனது பெயரை அமெரிக்க போட்டிகளின் போது மட்டும் மரியா சுகர்போவா என்று வைத்துக்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

உலகின் முன்னணி வீராங்கனையான மரியா ஷரபோவா, சுகர்போவா என்ற இனிப்பு வகையை அறிமுகப்படுத்தி வியாபாரம் செய்து வருகிறார்.

இதற்கு வருகிற 26ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை நடக்கும் அமெரிக்க டெனிஸ் போட்டிகளின்போது விளம்பரம் தேடவிருக்கிறார். இதற்காக தனது பெயரை மரியா சுகர் போவா என்று வைத்துக்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

மேலும் இனிப்பு வகையின் சின்னமான சிவப்பு நிற உதடுகள் படம்போட்ட ஆடையை அணிந்து விளையாடவிருக்கிறார்.

## பகல் - இரவு டெஸ்ட் போட்டியை அறிமுகப்படுத்தவேண்டும்; டிராவிட்

பகல்-இரவு டெஸ்ட் போட்டியை அறிமுகப் படுத்த வேண்டும் என்று முன்னாள் இந்திய அணித் தலைவர் ராகுல் டிராவிட் வலியுறுத்தியுள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

டெஸ்ட் கிரிக்கெட்டை பகல்-இரவு போட்டியாக நடத்த திறந்த மனதுடன் முயற்சிக்க வேண்டும். மின்னொளியின் கீழ் டெஸ்ட் போட்டி நடப்பதால், அதன் பாரம்பரிய தன்மைக்கு எந்த அச்சுறுதலும் வராது. இந்த போட்டிகளில் 'பிங்க்' நிற பந்துகளை பயன்படுத்த யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 'பிங்க்' நிற பந்துகளில் விளையாடுகையில் பிரச்சினை இருப்பதாக ஒரு தரப்பினர் கூறுவதை அறிவேன். 'பிங்க்' நிற பந்தில் விளையாடிய அனுபவம் எனக்கு கொஞ்சம் உண்டு. எம்.சி.சி. அணிக்காக பிங்க் நிற பந்துகளில் ஆடிய போது, அதை



எதிர்கொண்டு ஆடுவதில் எந்த பிரச்சினையும் இருப்பது போல் தெரியவில்லை.

இதேபோல் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் விளையாடும்போது பனியின் தாக்கம் இருக்கலாம். சரியான காலத்தில், சரியான இடத்தில் போட்டி அட்டவணையை அமைத்தால் இரவில் பனிப்பொழிவு பிரச்சினையை தவிர்த்து விடலாம். ரசிகர்களின் கூட்டத்தை ஈர்க்க பகல்-இரவு டெஸ்ட் போட்டி அவசியமாகும்.

காலத்திற்கு தகுந்தாற் போல் மாற்றங்கள் என்பது 20 ஓவர் கிரிக்கெட்டை மட்டும் பிரபலப்படுத்த வேண்டும் என்று அர்த்தம் கிடையாது. டெஸ்ட் கிரிக்கெட்டுக்கும் மாற்றம தேவை. இங்கிலாந்தில் நீண்ட காலம் நடந்து வரும் விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் கூட சில மாற்றங்கள் வந்திருக்கிறது. முன்பு போல் இல்லாமல் ஆட்டம் பாதிக்கப்படுவதை தவிர்க்க விம்பிள்டனில் மேற்கூரை கொண்ட ஸ்டேடியம் பயன்படுத்தப்படுவதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

எனவே பகல்-இரவு டெஸ்ட் போட்டியை சீக்கிரம் நடத்துவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என டிராவிட் கூறினார்.

## மாற்றங்களுடன் ஆஸி.அணி

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்ட் போட்டி, லண்டனில் ஆரம்பமாகியது

இதில் அவுஸ்திரேலியா அணி சார்பில் மூன்றாவது ஆட்டக்காரராக களமிறங்கும் உஸ்மான் கவாஜாவிற்குப் பதிலாக டாஸ்மேனியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் பால்க்னரை கிரி.சபை தெரிவு செய்துள்ளது.

அதேபோல், ஜாக்சன் பேர்டுக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் மீண்டும் அணிக்குத் திரும்புகின்றார்.

23 வயதுக்குட்பட்டோர் போட்டிகளில் இதுவரை ஜேம்ஸ் பால்க்னர் 132 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். வேறு திறமையான வீரர்கள் இல்லாத காரணத்தினால் கிரி.சபை இவர் மீது வாய்ப்பினைத் திணிக்கின்றதோ என்ற சந்தேகத்தினை அணித்தலைவர் மைக் கல் கிளார்க் மறுத்தார்.

கிரிக்கெட் சபையின் உறுப்பினர்கள் இந்த அணி வெல்லும் என்ற நம்பிக்கையிலேயே பால்க்னரைத் தெரிவு செய்ததாக கிளார்க் கூறுகின்றார்.

## கயானா அணிக்காக டில்சான் ஒப்பந்தம்



இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்ஷான் கரீபியன் பிறீமியர் லீக் தொடருக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கயானா அணி சார்பாக அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

கயானா அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றி வந்த நியூசிலாந்து அணியின் மார்ட்டின் கப்ரில் உபாதைக்குள்ளான நிலையிலேயே அவருக்குப் பதிலாகவே திலகரட்ண டில்ஷான் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி கயானா அணி சார்பாக திலகரட்ண டில்ஷான் அரையிறுதிப் போட்டியிலும், இறுதிப் போட்டிக்கு அவ்வணி தகுதி பெற்றால் இறுதிப் போட்டியிலும் திலகரட்ண டில்ஷான் பங்குபற்றவுள்ளார்.

கயானா அணி சார்பாக இலங்கையின் லசித் மலிங்கவோடு இணைந்து திலகரட்ண டில்ஷான் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்.

கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் லசித் மலிங்க தவிர, முத்தையா முரளிதரன், குமார சங்கக்கார, மஹேல ஜெயவர்தன ஆகியோரும் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மார்ட்டின் கப்ரிலை இழக்க வேண்டி ஏற்பட்டமை குறித்து வருத்தமடைவதாகத் தெரிவித்த கயானா அணியின் பயிற்றுவிப்பாளர் றொஜர் ஹார்ப்பர், எனினும் திலகரட்ண டில்ஷான் போன்ற உயர்நிலைத் தகுதி கொண்ட வீரரை இணைத்துக் கொள்ள முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்துள்ளார்.

## அதிக அளவு சம்பாதிக்கும் வீரர்களில் அமெரிக்க கோல்ப் வீரர் முதலிடம்

உலகளவில் கடந்தாண்டு அதிகம் சம்பாதித்த விளையாட்டு வீரர்களின் பட்டியலை பிரபல போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இதில் போட்டி சம்பளம், விளம்பர ஒப்பந்தங்கள் மூலம் கிடைக்கும் தொகை போன்றவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இப்பட்டியலில் அமெரிக்க கோல்ப் வீரர் டைகர் உட்ஸ்(78.1 மில்லியன் டொலர்), சுவிட்சர்லாந்தின் டெனிஸ் வீரர் ரோஜர் பெடரர்(71.5 மில்லியன் டொலர்), அமெரிக்க கூடைப்பந்து வீரர் கோப் பிரையண்ட்(61.9 மில்லியன் டொலர்) ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

2011ஆம் ஆண்டுக்கான பட்டியலில் 31ஆவது இடத்திலிருந்த டோனி, 16ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இவரது கடந்தாண்டு வருமானம் ரூ. 180 (இந்தியப் பணம்) கோடியாம்.

மேலும் உலகின் முன்னணி நட்சத்திரங்களான பார்முலா-1 கார்பந்தய வீரர் பெர்னாண்டோ அலோன்சா 19ஆவது இடமும், லீவிஸ் ஹாமில்டன் 26ஆவது இடமும், சேர்பியாவின் டெனிஸ் வீரர் ஜோகோவிச் 28ஆவது இடமும், ஸ்பெயினின் நடால் 30ஆவது இடமும் பெற்றனர்.

உலகின் மின்னல் வேக ஓட்டப்பந்தய வீரரான ஜமைக்காவின் உசைன் போல்ட் 40ஆவது இடம் பிடித்தார். மற்றொரு இந்திய வீரரான சச்சின்(ரூ. 125 கோடி) 31ஆவது இடம் பிடித்தார்.

வீராங்கனைகளுக்கான பட்டியலில் ரஷ்ய டெனிஸ் நட்சத்திரம் ஷரபோவா(29 மில்லியன் டொலர்) தொடர்ந்து 9ஆவது ஆண்டாக முதலிடம் பிடித்தார்.

இரண்டாவது இடத்தை உலகின் நம்பர்-1 வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் (20.5 மில்லியன் டொலர்) பெற்றார். சீனாவின் லீ நா(18.2 மில்லியன் டொலர்), பெலாரசின் விக்டோ ரியா அசரன்கா (15.7 மில்லியன் டொலர்) ஆகியோர் முறையே மூன்றாவது, நான்காவது இடத்தை பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் : ஆஸி சிறந்த ஆரம்பம்

ஷேன் வோட்சனின் அபார சதத்தின் உதவியுடன் இங்கிலாந்திற்கெதிரான ஆஷஸ் தொடரின் முதலாம் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா அணி பலம்வாய்ந்த நிலையை அடைந்துள்ளது.



இங்கிலாந்திற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியா அணி 5 போட்டிகளைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்குபற்றி வருகின்றது.

தொடரை ஏற்கெனவே இங்கிலாந்து அணி 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ள நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 5-வதும் இறுதியுமான போட்டி லண்டனில் உள்ள கென்னிங்டன் ஓவல மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர் - கிறிஸ் றோஜர்ஸ் ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் அணி 11 ஓட்டங்களை எடுத்திருந்த போது வோர்னர் 6 ஓட்டங்களுடன் அண்டர்சனின் பந்தில மத்யூ பிரையரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இவரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களம்புகுந்த ஷேன் வோட்சன் அபார ஆட்டத்தினை வெளிப்படுத்தி மைதானத்தின் நாலாபுறங்களிலும் பந்தைச் சிதறடித்தார். இவருக்கு ஓரளவு ஒத்துழைப்பு வழங்கிய ஆரம்பவீரர் றோஜர்ஸ் தன்பங்குக்கு 23 ஓட்டங்களை எடுத்திருந்த போது ஸ்வானின் சுழலில் வெளியேறினார்.

அதன்பின் துடுப்பாட வந்த அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் தொடர்ந்து வந்த ஸ்ரீபன் ஸ்மித், ஷேன் வோட்சனுடன் இணைந்து அபாரமாகத் துடுப்பெடுத்தாடினார். இருவரும் இணைந்து 4-வது விக்கெட்டுக்காக 145 ஓட்டங்களைப் பகிர்ந்த வேளையில் முதலாம் நாள் நிறைவடைவதற்கு ஒரு சில ஓவர்களே இருந்த நிலையில், இங்கிலாந்து வீரர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய ஷேன் வோட்சன் 247 பந்துகளைச் சந்தித்து 25 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 176 ஓட்டங்களை எடுத்திருந்த போது ஸ்ரூவர்ட் பிரோட்டின் பந்தில் பீற்றர்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

முதல் நாள் நிறைவில் அவுஸ்திரேலியா அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 301 என்ற பலமான நிலையை அடைந்துள்ளது.

களத்தில் ஸ்ரீபன் ஸ்மித் 66, பீற்றர் சிடில் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது காணப்படுகின்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அண்டர்சன் 52 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், ஸ்வான், பிரோட் ஆகியோர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் 2-ம் நாள் ஆட்டம் இன்றாகும்.



# நவாலி சென்.பீற்றர்ஸ் வி.க. கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் மறைந்த கழக உறுப்பினர் குமார் தேவராசா ஞாபகார்த்த யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 9 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கழக விளையாட்டு மை தானத்தில் நடைபெற்றது.

மேற்படிச் சுற்றுப்போட்டியில் இதுவரையிலும் நடைபெற்ற போட்டியில் சென்.மைக்கல், சென்.நீக்கிலஸ், அரியாலை ஐக்கியம், திருக்குமரன், சென்.அன்ரனீஸ் அணிகள் வெற்றிபெற்றிருந்தன.

வெற்றிபெற்ற அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப்போட்டிகளில் முதல் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியினை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் அணி மோதியது.

இப் போட்டியில் சென்.மைக்கல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் மோதிய அரியாலை ஐக்கிய அணிக்கும் உரும்பிராய் திருக்குமரன் அணிக்கும் இடையிலான போட்டியில் 4.2 என்ற கோல் கணக்கில் அரியாலை ஐக்கிய அணி வெற்றிபெற்றது.

# பயிற்சி வழங்க...

இலங்கைப் படைத்தரப்பின் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மற்றும் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஆகியோருக்கே இவ்வாறு பயிற்சிகளை வழங்க அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளது.

நியூசிலாந்தின் ஒக்லாந்தில் அடுத்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பசுபிக் படைத்துறை முகாமைத்துவக் கருத்தரங்குக்கு அனுப்புவதற்கு மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க மற்றும் வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா ஆகியோரின் பெயர்களை இலங்கைப் படைத் தலைமையகம் பரிந்துரைத்திருந்தது.

இவர்களில் மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா மட்டுமே இப்பயிற்சிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமெரிக்கா, ஏனைய இருவரும் பொறுப்புக்கூறல் விவகாரங்களுடன் தொடர்புடையதால் அவர்களின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் படைத் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கைப் படைத்தரப்பின் 57-வது படைப்பிரிவின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், ஜேர்மனிக்கான பிரதித் தூதுவராக நியமிக்கப்பட்ட போது, அவர் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இவருக்கு எதிராக சுவிற்சர்லாந்தில் போர்க்குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அந்நாட்டுக்குள் பிரவேசித்தால் அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைப் படைத்தரப்பின் புனர்வாழ்வு ஆணையாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தில் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த படைத் தரப்பின் 53-வது படைப்பிரிவின் தளபதியாகப் பதவி வகித்தவர் எனத் தெரிவிக்கப்பட்டு, மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவை சில மாதங்களுக்கு முனனரும் படைத்துறைப் பயிற்சிக்கு ஏற்றுக் கொள்ள அமெரிக்கா மறுத்திருந்தது.

ஆயினும், படைத்தரப்பின் 53-வது படைப்பிரிவின் தளபதியாக மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க அண்மையிலேயே நியமிக்கப்பட்டிருந்தார் என இலங்கையின பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்த போதிலும், அமெரிக்கா அதனை ஏற்றுக கொள்ளவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுடன் தொடர்புபட்டவர்கள் என்று குற்றம் சுமத்தப்படும் படைத்தரப்பின் 58-வது படைப்பிரிவின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, 59-வது படைப்பிரிவின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா மற்றும் யாழ். படைகளின் கட்டளைத் தளபதியாக உள்ள மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோரையும் போர் முடிவுக்கு வந்த பின்னர் அமெரிக்கா பயிற்சிகளுக்கு ஏற்றுக் கொள்ளவில்லை.

அத்துடன் நியூயோர்க்கில் உள்ள படைத்துறைக் கல்லூரிக்குள் பிரவேசிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி விதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)





நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஞ்சத் திருவிழா நேற்று மாலை நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம்

(கரவெட்டி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 2-ம திகதி வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன், இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு பாரா ளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், வேட்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பிரசாரக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (செ-24)

# பாதுகாப்பு வலயத்....

பூசை வழிபாடுகளில் மக்கள் ஈடுபடுவதற்கான அனுமதியை அரசாங்கத்திடம் பெறும் நோக்கத் தோடு ஆலயங்களின் விபரங்களை இந்து மாமன்றம் சேகரித்து வருகின்றது.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் யாழ்.கோவில் வீதியிலுள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்.பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்பே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-6)

# பேரறிவாளன்....

கொண்டு பல்வேறு தகவல்களை அவர் கோரினார்.

மாநில சிறைத் துறை சார்பில் ஒரு அதிகாரியும் இச் சந்திப்பில் பங்கேற்றிருக்கிறார்.

அப்போது பேரறிவாளன் 1999ஆம் ஆண்டு ஜுன் முதல் தனது கருணை மனு மீது என்ன வெல்லாம் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன, குடியரசுத் தலைவர் தனது மனுவினை நிராகரித்தது தொடர்பான விபரங்கள், தன்னை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சந்திக்க வந்த ஆராய்ச்சியாளர் லீனாவுக்கு சிறைத்துறை அனுமதி மறுத்தது குறித்த தகவல்கள், தனது உடல் நிலை குறித்த ஆவணங்கள் எனப் பலவற்றை கோரியிருக்கிறார்.

கோரப்படும் தகவல்களை அரசுத் துறைகள் மறுக்குமானால் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் ஆணையரை அணுகலாம் என்ற விதியின் கீழேயே பேரறிவாளனின் தற்போதைய முயற்சிகள் வந்துள்ளன.

அவரது கோரிக்கைகளை மிகவும் அனுசரணையுடன் மாநிலத் தகவல் ஆணைய அதிகாரிகள் கேட்டதாகக் கூறிய பேரறிவாளனின் தரப்பினர் ஆணையத்தின் உத்தரவு பின்னர் வெளியிடப்படும் எனத் தெரிவித்துள்ளனர். (செ-11)

# பாகிஸ்தானுக்கு ஒரு....

இதுவரை எதையும் கூறவில்லை. இலங்கைப் பிரச்சினையை பொறுத்தவரை இந்திய அரசு ஆரம்பத்திலிருந்தே ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவாகவும், ஈழத் தமிழர்களுக்கு எதிராகவும் தான் செயல்பட்டு வருகிறது.

பொதுநலவாய அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டாலோ அல்லது ஜனநாயகத்திற்கு எதிராக செயல்பட்டாலோ, அந்த நாடுகளை பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் இந்தியா தான் தீவிரம் காட்டியிருக்கிறது.

பொதுநலவாய அமைப்பு தொடங்கப்பட்டதில் இருந்து இன்று வரையிலான 65 ஆண்டுகளில் பாகிஸ்தான், பிஜி தீவுகள், ஜிம்பாவே, நைஜீரியா ஆகிய 4 நாடுகள் மட்டுமே இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவளித்திருக்கிறது. 1999 மற்றும் 2007-ம் ஆண்டுகளில் பாகிஸ்தான் இடைநீக்கம் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளை இந்தியா தான் மேற்கொண்டது.

பாகிஸ்தானை பொதுநலவாய அமைப்பிலிருந்து இருமுறை நீக்க நடவடிக்கை எடுத்த மத்திய அரசு, இலங்கைக்கு எதிராக அதே நடவடிக்கையை எடுப்பதற்கு மட்டும் தயங்குவது ஏன்? பாகிஸ்தானுக்கு ஒரு நீதி, இலங் கைக்கு ஒரு நீதியா?

உத்தமர் வேடம் போட முயலும் ராஜபக்ஷவுக்கு இந்தியா எந்த வகையிலும் துணை போகக்கூடாது. மாறாக தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பொதுநல வாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக் கூடாது.

எதிர்வரும் நவம்பர் 13 மற்றும் 14-ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில், அந்த அமைப்பிலிருந்து இலங்கையை இடைநீக்கம் செய்வதற்கான தீர்மானத்தை நட்பு நாடுகள் மூலமாக கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற ஈழத்தமிழர் இனப் படுகொலை மற்றும் போர்க்குற்றங்களைக் கண்டித்து இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் அவரது கூட்டாளிகள் மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் சிங்களவர்களுடன் தமிழர்கள் ஒன்றாக வாழ வாய்ப்பே இல்லை என்பதால், தமிழர்கள் வாழும் பகுதிகளை ஒருங்கிணைத்து, அதை தமிழீழமாக அறி விப்பது குறித்து ஐ.நா.மன்றத்தின் மூலம் உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர் களிடையே வாக்கெடுப்பு நடத்த வகை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என ராமதாஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (செ-11)

# இந்திய ஜனாதிபதி....

குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அகில இந்திய காங்கிரஸ் குழுவின் செயலாளர் திக் வியஜ்சிங்கையும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அத்துடன், பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஜஸ்வந்த் சிங்ஹாவையும் ரணில் சந்தித்து பேசியிருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான குர்ஷித்தை எதிர்க் கட்சித் தலைவர் ரணில், விக்கிரமசிங்க நேற்று சந்தித்துள்ளார். (செ-11)

# யாழில் ஐந்து...

கலந்துரையாடலின்போது யாழ்.மாவட்டத்திற்குள் இடம்பெயர்ந்து இருக்கின்ற வாக்காளர்களுக்கு தேர்தலின்போது போக்குவரத்து வசதிகள் சிரமமாக இருக்கும் எனக கூறப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட நாம் அவர்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையிடமும், தனியார் பஸ் சங்கத்திடமும் கலந்துரையாடி போக்குவரத்து வசதிகளினை ஒழுங்கு செய்து கொடுக்கவுள்ளோம்.

நெடுந்தீவில் நடைபெற்ற தாக்குதல்சம்பவம் தொடர்பில் முறைப்பாடு எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்திற்குப் பின்னர் அரசியல் கட்சியொன்று நெடுந்தீவில் பிரசாரத்தினை மேற்கொண்டுள்ளது. இதிலிருந்து நிலைமை சீராகியுள்ளது எனத் தெளிவாகியுள்ளது.

யாழ்.நகரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகின்றது.

நாவாந்துறைப் பகுதியில் இராணுவத்தினர் தேர்தல் அதிகாரிகளை அச்சுறுத்தவில்லை.

இனிவரும் நாட்களில் வேட்பாளர்களை அச்சுறுத்தும் சம்பவம் இடம்பெற்றால் அது தொடர்பில் பொலிஸ் நிலையங்களிலும் தேர்தல் திணைக்களத்திடமும் முறைப்பாடு செய்யுங்கள்.

வேலணை, நெடுந்தீவு, சாவகசேரி, சண்டிலிப்பாய், பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் தேர்தல் திணைக்களத்தின் முறைப்பாட்டு நிலையங்கள் ஆரம் பிக்கப்படவுள்ளன என்றார் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய. (செ-4)

# ஜனாதிபதி மகிந்த....

ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட உயர் மட்ட பிரதிநிதிகளும் பெலாரஸ் பயணமாகவுள்ளனர்.

அதேவேளை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பாகிஸ்தானுக்கு இன்று விஜயம் செய்ய உள்ளார்.

அவர் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கான உத்தியோகபூர்வ அழைப்பை விடுக்க உள்ளார்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பாகிஸ்தான் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்தததை நடத்த உள்ளார். (செ-11)

# எந்த தீவிரவாத....

எவ்விதமான தீவிரவாத ஆபத்துகளும் இல்லை என்பதை உறுதியாக கூறமுடியும் என்றார்.

8 தீவிரவாதிகள் பாகிஸ்தானின தீவிரவாத பயிற்சிகளை பெற்று வருவதாகவும் இலங்கையின் வடக்கிலிருந்து தென்னிந்தியா மீது தாக்குதல் நடத்துவதே அவர்களின் இலக்கும் என்றும் இந்திய மத்திய புலனாய்வு பிரிவான றோ அமைப்பு எச்சரித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்திகளை பிரசுரித்திருந்தன.

இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே இலங்கையின் இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

# பசில்-....

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற இந்த சந்திப்பில் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளின் முன்னேற்றம், மீள்குடியேற்றம், வட பகுதியின் அபிவிருத்தி பணிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டின் முன்னேற்பாடுகள், மாநாட்டின் வழியாக இலங்கைக்கு கிடைக்கும் பிர்திபலன்கள் சம்பந்தமாகவும் இருவரும் கலந்துரையாடியாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர வடக்கில் பிரித்தானிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், புதிய முதலீடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் பிரிவின் தலைமை அதிகாரியான டேனியல் ஜென்டரும் கலந்து கொண்டார். (செ-11)


## தேவை

பாவித்த மோட்டார் சைக்கிள்கள் தேவை. (China, India)

தொடர்புகள்: 0772259030

(3661)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பாசமழை பொழிந்து பாரினில் எமை வளர்த்தீர்கள். பாசமுடன் நாங்கள் தேட பறந்து எங்கு சென்றீர்கள். கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி நிற்க, இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் ஆத்ம சாந்திக்காய் 22.08.2013

தோற்றம் 17 . 03 . 1938

மறைவு 23 . 07 . 2013

அமரர் தம்பிமுத்து சுந்தரலிங்கம்

வியாழக்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அமரர் தம்பிமுத்து சுந்தரலிங்கம் அவர்களது சபிண்டிகரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஒஸ்கா லேன், உரும்பிராய் தெற்கு. உரும்பிராய்.

- குடும்பத்தினர்

(C-4397)



பிரெஞ்சு மொழிக் கற்கைக்கு

யாழில் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு உத்தியோகபூர்வ FRENCH நிறுவனம்

af

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்

The Only Official Centre for French Language in Jaffna

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

Learn French The French Way

❖ France இன் Paris நகரில் உள்ள தலைமை நிறுவனமாகிய "Alliance Francaise de paris" ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Francaise de Jaffna" மட்டுமே.

❖ உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Francaises உள்ளன. இலங்கையில் COLOMBO, KANDY, JAFFNA, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன. (French Embassy website: www.ambafrance-lk.org)

❖ சர்வதேச தரம் வாய்ந்த இந்நிறுவனத்தில் France மற்றும் French பேசப்படும் நாடுகளுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

➢ ஒவ்வொருவரிடமும் Listening, speaking, reading & writing ஆகிய திறமைகள் சோதிக்கப்படுகின்றன.

➢ 6 மாத கற்கைவுநெறியின் ( BASICS 100 HOURS) முடிவில் பரீட்சை நடத்தப்பட்டு தரமான CERTIFICATE வழங்கப்படுகிறது. 6 மாதத்தினைப் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் கடிதம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

➢ அதன் பின்னர் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய பரீட்சைகளான DELF, DALF பரீட்சைகளுக்கு குறைந்த கட்டணத்தில் எமது நிறுவனத்தினூடாக மட்டுமே அனுமதிகளை பெற முடியும்.

வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்...

புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

வட மாகாணத்தில் தனியொரு முகவரி:

61, Kachcheri -Nallur Road, Jaffna. T.P: 0212228093 /நேரில் வரலாம்

E-Mail: alliancejaffna@yahoo.com

(நக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)

(3642)





வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர்க் கந்தனை வேண்டுகின்றோம்.

இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னணியான நிறுவனம்

## World Express Services

உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்




(C-4307)

தலைமை அலுவலகம்: 338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு - 15 தொ. பே.: 0112520894

கிளை : 277, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. 021 222 0356 (Central Nursing Home முன்பாக).

e.mail : worldexpress.ser@gmail.com www.worldexpressservices.com

கிளை : 180/5 புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா. தொ. பே. : 024 490 3200

(C-4280)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.